Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# ஹலோ மிரர் மெட்ராஸ்

hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 2 | சென்னை | தினசரி | 6 பக்கம் | திங்கள்கிழமை, பிப்ரவரி 06, 2022 | 4 பக்கங்கள் | ரூ.2/- | இதழ் 207

# ஜெய்ப்பூர் மகாகேல் விழாவில் பிரதமர் காணொலி மூலம் உரையாற்றினார் “கற்றல் ஈடுபாடு இருந்தால் வெற்றி நிச்சயம்“

சென்னை, பிப்ரவரி 06 2023: ஜெய்ப்பூர் மகாகேல் விழாவில் பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று காணொலி மூலம் உரையாற்றினார். விழாவில் கபடி போட்டியையும் அவர் பார்வையிட்டார். ஜெய்ப்பூர் ஊரகத் தொகுதி மக்களவை உறுப்பினரான திரு ராஜ்யவர்தன் சிங் ரத்தோர் 2017 ஆம் ஆண்டு முதல் ஜெய்ப்பூர் மகாகேல் விழாவை நடத்தி வருகிறார்.

கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர், இந்த மெகா போட்டியில் பதக்கம் வென்ற வீரர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு வாழ்த்து தெரிவித்தார். விளையாட்டுத் துறையில் பங்கேற்பதற்காக மட்டும் வீரர்கள் விளையாடவில்லை, வெற்றி பெறவும், கற்றுக் கொள்வதற்காகவும் விளையாட்டுத் துறையை அலங்கரித்ததாக அவர் குறிப்பிட்டார். “கற்றல் ஈடுபாடு இருந்தால் வெற்றி உறுதி”, எந்த ஒரு வீரரும் விளையாட்டுத் துறையை வெறுங்கையுடன் விட்டுவிடுவதில்லை என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தப் போட்டியில் இந்தியாவின் பெயரை விளையாட்டுத் துறையில் புதிய உச்சத்துக்குக் கொண்டு சென்ற பல புகழ்பெற்ற வீரர்களான ஆசிய விளையாட்டுப் பதக்கம் வென்ற ராம் சிங், தியான்சந்த் கேல் ரத்னா விருது பெற்ற பாரா தடகள வீரர் தேவேந்திர ஜஜாரியா, அர்ஜுன். விருது பெற்ற சாக்ஷி குமாரி ஆகியோரின் பெயர்களைக்குறிப்பிட்ட பிரதமர், இந்தியாவின் புகழ்பெற்ற பல மூத்த விளையாட்டு வீரர்கள், ஜெய்ப்பூர் மஹாகேலில் உள்ள இளம் விளையாட்டு வீரர்களுக்கு ஆதரவளிக்க முன்வந்திருப்பது குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார்.

நாடு முழுவதும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கேல் மகாகும்ப் விழாக்களின் தொடர் நிகழ்வுகள் மகத்தான மாற்றங்களின் பிரதிபலிப்பாகும் என்று பிரதமர் சுட்டிக் காட்டினார். ராஜஸ்தான் மாநிலம் இளைஞர்களின் ஆர்வத்துக்கும் வீரியத்துக்கும் பெயர் பெற்றதாகக் குறிப்பிட்ட பிரதமர், மண்ணின் பிள்ளைகள் தங்கள் வீரத்தால் போர்க்களங்களை விளையாட்டுக் களமாக மாற்றியிருக்கிறார்கள் என்பதற்கு சரித்திரமே சான்று என்றார். "தேசத்தின் பாதுகாப்பு என்று வரும்போது ராஜஸ்தானின் இளைஞர்கள் எப்போதும் மற்றவர்களை விட முன்னோக்கி வருகிறார்கள்", பிராந்திய இளைஞர்களின் மனம் மற்றும் உடல் திறன்களை வடிவமைப்பதற்காக ராஜஸ்தானின் விளையாட்டு மரபுகளை அவர் பாராட்டினார். மகர சங்கராந்தியின் போது ஒழுங்கமைக்கப்பட்ட தாதா, சிடோலியா மற்றும் ருமல் ஜப்பட்டா போன்ற பாரம்பரிய விளையாட்டுகளின் உதாரணங்களை அவர் குறிப்பிட்டார், மேலும் அவை பல நூறு ஆண்டுகளாக ராஜஸ்தானின் பாரம்பரியத்தின் ஒரு பகுதியாகும்.

ராஜஸ்தானைச் சேர்ந்த ஏராளமான விளையாட்டு வீரர்கள் தங்கள் விளையாட்டுப் பங்களிப்பால் மூவர்ணக் கொடியை புதிய உச்சத்துக்குக் கொண்டு சென்றதைக் குறிப்பிட்ட பிரதமர், ஜெய்ப்பூர் மக்கள் ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற ஒருவரைத் தங்கள் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்ததைச் சுட்டிக்காட்டினார். நாடாளுமன்ற உறுப்பினர் திரு ராஜ்யவர்தன் சிங் ரத்தோரின் பங்களிப்பைக் குறிப்பிட்ட அவர், நாடாளுமன்ற விளையாட்டுப் போட்டிகளில் பங்களிப்பதன் மூலம் இளைய தலைமுறையினருக்குத் திரும்பக் கொடுப்பதாக மகிழ்ச்சி தெரிவித்தார். மேலும் விரிவான பலன்களுக்காக இதுபோன்ற முயற்சிகளை விரிவுபடுத்துவதை வலியுறுத்திய பிரதமர், ஜெய்ப்பூர் மஹாகேலின் வெற்றிகரமான ஏற்பாட்டை இந்த முயற்சிகளுக்கான அடுத்த முக்கிய இணைப்பாகக் குறிப்பிட்டார். ஜெய்ப்பூர் மகாகேலின் வெற்றியை எடுத்துரைத்த பிரதமர், இந்த ஆண்டுக்கான போட்டியில் 600க்கும் மேற்பட்ட அணிகளும், 6,500 இளைஞர்களும் பங்கேற்றுள்ளனர் என்று தெரிவித்தார். 125 க்கும் மேற்பட்ட பெண்கள் அணிகள் பங்கேற்றது ஒரு இனிமையான செய்திஆகும் என அவர் குறிப்பிட்டார்.



“சுதந்திரத்தின் அமிர்த காலத்தில், நாடு புதிய வரையறைகளை உருவாக்கி புதிய ஒழுங்கை உருவாக்குகிறது” என்று பிரதமர் குறிப்பிட்டார். விளையாட்டின் முடிவுகள் அரசியல் கண்ணோட்டத்தில் பார்க்காமல் விளையாட்டு வீரர்களின் கண்ணோட்டத்தில் பார்க்கப்படுகிறது என்று அவர் குறிப்பிட்டார். இளைஞர்களால் முடியாதது எதுவுமில்லை, அவர்களின் திறன்கள், சுயமரியாதை, தன்னம்பிக்கை, வசதிகள் மற்றும் வளங்களின் வலிமையை உணர்ந்து கொள்ளும்போது ஒவ்வொரு நோக்கமும் எளிதாகிவிடும் என்றார் அவர்.

இவ்வருட வரவு செலவுத் திட்டத்திலும் அவ்வாறான அணுகுமுறையை காணமுடியும் என்று பிரதமர் கூறினார். 2014ஆம் ஆண்டுக்கு முன்பு ரூ. 800-850 கோடியாக இருந்த விளையாட்டுத்துறை அமைச்சகத்துக்கான ஒதுக்கீடு, இந்த ஆண்டு ரூ 2500 கோடி அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார். “நாட்டின் விளையாட்டு பட்ஜெட் 2014ஆம் ஆண்டிலிருந்து கிட்டத்தட்ட மூன்று மடங்கு அதிகரித்துள்ளது” என்றார் அவர். நாட்டின் விளையாட்டு வசதிகள் மற்றும் வளங்களை மேம்படுத்துவதற்காக செலவிடப்படும் ‘கேலோ இந்தியா’ பிரச்சாரத்திற்கு மட்டும் ரூ.1000 கோடிக்கு மேல் ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஆர்வத்திற்கும் திறமைக்கும் குறைவில்லை என்பதை குறிப்பிட்ட பிரதமர், இந்திய இளைஞர்களிடையே விளையாட்டுக்காக, ஆனால் அரசிடம் இருந்து ஒத்துழைப்பு மற்றும் ஆதரவு கிடைக்காதது தடைகளை உருவாக்கியது. விளையாட்டு வீரர்கள் எதிர்கொள்ளும் இந்த பிரச்சினைகள் இன்று தீர்க்கப்படுகின்றன என்று அவர் கூறினார். கடந்த 5-6 ஆண்டுகளாக நடத்தப்பட்டு வரும் ஜெய்ப்பூர் மகாகேலை உதாரணமாகக் கூறிய பிரதமர், ஆயிரக்கணக்கான இளைஞர்களின் திறமைகளை முன்னுக்கு கொண்டு வரும் பிஜேபியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களால் நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் கேல் மஹாகும்ப் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன என்றார்.

உள்ளூர் மற்றும் மாவட்ட அளவில் விளையாட்டு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருவதால், இந்த வெற்றிகள் மத்திய அரசையே சேரும் என்றார் பிரதமர். நாட்டில் உள்ள நூற்றுக்கணக்கான மாவட்டங்களைச் சேர்ந்த லட்சக்கணக்கான இளைஞர்களைக் கருத்தில்கொண்டே இந்த விளையாட்டு உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டதாகவும், அதன் ஒருபகுதியாக ராஜஸ்தான் மாநிலத்தின் பல்வேறு நகரங்களில் விளையாட்டு உள்கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டதாகவும் கூறினார். இன்றைக்கு விளையாட்டுப் பல்கலைக்கழகங்கள் நாட்டில் ஏற்படுத்தப்பட்டு வருவதாகவும், கேல் மஹாகும்ப் போன்ற நிகழ்ச்சிகள் சிறப்பான வகையில் நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். தேசிய விளையாட்டுப் பல்கலைக்கழகத்திற்கு இந்த ஆண்டு பட்ஜெட்டில் அதிகபட்சமாக நிதி ஒதுக்கப்பட்டிருப்பதையும் பிரதமர் சுட்டிக்காட்டினார். விளையாட்டு மேலாண்மை மற்றும் விளையாட்டு தொழில்நுட்பங்கள் சார்ந்த அனைத்து அம்சங்களையும் கற்றுக்கொள்ளும் சூழலை உருவாக்க வேண்டியது அவசியம் என வலியுறுத்திய அவர், இந்தத் துறையை இளைஞர்கள் தங்கள் தொழிலாக மாற்றிக்கொள்வதற்கான வாய்ப்பையும் உருவாக்க வேண்டும் என்றார்.

இளைஞர்கள் பணம் இல்லாததால், சிறந்த வாய்ப்பை இழந்துவிடக்கூடாது என்பதில் எனது அரசு கவனமாக இருக்கிறது என மேற்கோள் காட்டிய பிரதமர், விளையாட்டில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கு ஆண்டிற்கு ரூ.5 லட்சம் ரூபாயை மத்திய அரசு வழங்கி வருவதையும் சுட்டிக்காட்டினார். முக்கியமான விளையாட்டு விருதுகளுக்கு வழங்கப்பட்டு வந்த பரிசுத்தொகையும் 3 மடங்கு அதிகரிப்பட்டிருப்பதாகக் கூறிய அவர், டிஓபிஎஸ் போன்றத் திட்டங்களில், வீரர்கள் ஒலிம்பிக் போட்டிக்காகத் தயாராக ஆதரவு அளிக்கப்படுவதை உதாரணமாகக் காட்டினார். ஒலிம்பிக்ஸ் போன்ற சர்வதேச அளவிலான மிகப்பெரியப் போட்டிகளில் பங்கேற்கும் வீரர்களுக்கு அரசு உறுதுணையாகவும், பக்கபலமாகவும் இருப்பதாகவும் கூறினார்.

விளையாட்டுத்துறை மட்டுமல்லாமல், அன்றாட வாழ்விலும், உடலைக் கட்டுக்கோப்பாக வைத்துக்கொள்வது அவசியம் எனக் குறிப்பிட்ட அவர், எந்தத் துறையைச் சேர்ந்தவராக இருந்தாலும், உடலைக் கட்டுக்கோப்பாக வைத்துக்கொள்வது மிகவும் முக்கியமானது என்றும் கூறினார். இதைத்தான், நீங்கள் ஃபிட்டாக இருப்பீர்கள், அப்போதுதான் சூப்பர் ஹிட் ஆவீர்கள் என கேலோ இந்தியா, ஃபிட் இந்தியா விழிப்புணர்வு வாசகங்களில் இடம்பெற்றிருப்பதை வலியுறுத்திய அவர், உடலைக் கட்டுக்கோப்பாக வைத்துக்கொள்வதில், ஊட்டச்சத்துக்களின் இன்றியமையாத பங்கு என்றும் குறிப்பிட்டார். ஐக்கிய நாடுகள் சபை, 2023ம் ஆண்டை சிறுதானிய ஆண்டாக அறிவித்திருப்பதை நினைவுகூர்ந்த பிரதமர், ஸ்ரீ அன்னா எனப்படும், சிறுதானியங்களின் தொன்மைமிக்க பாரம்பரியம் கொண்டது ராஜஸ்தான் என்றார். ராஜஸ்தானின் ஸ்ரீ அன்னா-பஜ்ரா, ஸ்ரீ அன்னா-ஜ்வர் ஆகியவை இந்த இடத்தின் அடையாளங்கள் என்றும் கூறினார். பஜ்ரா பொரிட்ஜ் மற்றும் சுர்மா இங்கு தயாரிக்கப்படுவதைச் சுட்டிக்காட்டிய அவர், அனைத்து இளைஞர்களும் ஸ்ரீ அன்னாவை தங்கள் உணவில் சேர்த்துக்கொள்வதுடன், அதன் தூதுவர்களாக மாறவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

நாம் முழுமனதோடு முயற்சியை மேற்கொள்ளும்போது, அதற்கான வெற்றி உறுதி செய்யப்படுகிறது என்பதற்கு ஏற்ப, டோக்கியோ ஒலிம்பிக்ஸ் மற்றும் காமன்வெல்த் போட்டிகளுக்கு இந்திய வீரர்கள் கடினமாக உழைத்ததால், கிடைத்த வெற்றியை நாம் அனைவரும் அறிவோம் என்றார். அதேபோல் ஜெய்ப்பூர் மஹாகேல்-லுக்காக போடப்படும் கடின உழைப்புக்கு, எதிர்காலத்தில், வியக்கத்தக்க வெற்றிகளை நாம் அடையப் போகிறோம் என்றும், அடுத்த தங்கம் மற்றும் வெள்ளிப்பதங்ககங்கள் உங்களில் இருந்து நாட்டிற்குக் கிடைக்கப்போகிறது என்றும் கூறினார். நீங்கள் மனம் வைத்தால், ஒலிம்பிக்கிலும் இந்தியாவின் பெருமை உலகிற்கு உணர்த்த முடியும், நீங்கள் எங்கே சென்றாலும், நாட்டிற்காக விருதுகளைக் கொண்டு வருவீர்கள், நமது இளைஞர்கள் நாட்டின் வெற்றியை அடுத்தக் கட்டத்திற்கு எடுத்துச்செல்வார்கள் எனக்கூறி பிரதமர் தமது உரையை நிறைவுசெய்தார்.

ஜெய்ப்பூர் ரூரல் தொகுதி மக்களவை உறுப்பினர் திரு. ராஜ்யவர்தன் சிங் ரத்தோர் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

# சென்னை விமான நிலையத்தில் பன்னடுக்கு வாகன நிறுத்துமிட வசதி (எம்எல்சிபி) தொடங்கப்பட்டது

சென்னை, பிப்ரவரி 06 2023: சென்னை விமான நிலையத்தில் பன்னடுக்கு வாகன நிறுத்துமிட வசதி (எம்எல்சிபி) இன்று தொடங்கி வைக்கப்பட்டது. மத்திய சிவில் விமான போக்குவரத்து மற்றும் எஃகு துறை அமைச்சர் திரு ஜோதிராதித்ய சிந்தியா, மத்திய தகவல் ஒலிபரப்பு, மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை இணையமைச்சர் டாக்டர்.எல்.முருகன், தமிழ்நாடு தொழில்துறை, தமிழ் ஆட்சி மொழி, தமிழ் கலாச்சாரம் மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு தங்கம் தென்னரசு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு டி.ஆர்.பாலு, டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். மேலும், மேற்கு பகுதி பார்க்கிங் இடத்தில் 24 மணி நேர உணவு விடுதியும் மத்திய சிவில் விமானப் போக்குவரத்து துறை அமைச்சரால் திறந்து வைக்கப்பட்டது.



நிகழ்ச்சியில் பேசிய மத்திய விமான போக்குவரத்து அமைச்சர்,

சென்னை நகரம் கலாச்சாரத்தின் மிக நீண்ட பாரம்பரியத்தில் ஒன்றாகும். உலகளாவிய நிலப்பரப்பில் இது உண்மையிலேயே ஒரு ரத்தினம் என்று தெரிவித்தார். மேலும், சென்னை தென்னிந்தியாவின் நுழைவாயில் எனவும், கல்விக்கான சிறந்த மையமாகவும், ஆட்டோமொபைல் மற்றும் தொழில்நுட்பத் துறைக்கான மையமாகவும் உள்ளது என்றார்.

பிரதமர் மோடி தமிழகத்தின் மீது சிறப்பு கவனம் செலுத்தி வருகிறார் என்று கூறிய அமைச்சர், கடந்த எட்டரை ஆண்டுகளில் பிரதமர் மோடியின் உந்துதலால் 73 விமான நிலையங்களை கட்டியுள்ளதாகவும், இந்த பிப்ரவரி மாதத்தில் 148வது விமான நிலைய திறப்பு விழா நடைபெறும் என தான் உறுதியளிப்பதாகவும் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் 9 செயல்பாட்டு விமான நிலையங்கள் உள்ளன எனவும், விமானங்களின் எண்ணிக்கை வரும் நாட்களில் 2000 ஆக அதிகரிக்கும் எனவும் தெரிவித்தார்.

சென்னை விமான நிலையத்தை விரிவுபடுத்த உள்ளதாகவும், அதில் முதல் கட்டம் இன ஆண்டு மார்ச் மாதத்திலும், இரண்டாம் கட்டம் அடுத்த ஆண்டு இறுதியிலும் தயாராகிவிடும் என தெரிவித்தார். மேலும் பயணிகள் எண்ணிக்கை அடுத்த ஆண்டு 400 மில்லியனை தொடும் என நம்பிக்கை தெரிவித்தார். விமான நிலையங்களின் விரிவாக்கத்திற்கு மத்திய அரசு தயாராக உள்ளதாகவும், இதற்கு மாநில அரசு ஒத்துழைப்பை அளிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இந்த பார்க்கிங் வசதியில் இரு சக்கர வாகனங்களுக்கான இடங்கள் உட்பட 2150 கார்களை வசதியாக நிறுத்த முடியும். மின்சார வாகன சார்ஜிங் நிலையங்கள், மல்டிபிளக்ஸ் திரையரங்கு, உணவு விடுதிகள் , சில்லறை விற்பனை நிலையங்கள், குழந்தைகள் விளையாடும் இடங்கள் என பல வணிக வசதிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்
ALL ONLINE SERVICES

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# விஜய் மில்டன் இயக்கத்தில் ஷாம்
# வாரிசு படத்தை தொடர்ந்து மீண்டும் பிஸியான ஷாம்

சென்னை, பிப்ரவரி 06 2023: தமிழ் சினிமாவில் 12 பி என்கிற வித்தியாசமான கதையம்சம் கொண்ட படம் மூலம் கதாநாயகனாக அறிமுகமானவர் நடிகர் ஷாம். அதைத்தொடர்ந்து இயற்கை, 6 மெழுகுவர்த்திகள் என இன்றும் ரசிகர்களிடம் பேசப்படும் அருமையான படங்களில் நடித்துள்ள ஷாம், நல்ல கதை அம்சம் கொண்ட படங்களாக மட்டும் தேர்ந்தெடுத்து வருவதால் தான் தனது 20 வருட திரையுலக பயணத்தில் சீரான வேகத்தில் பயணித்து வருகிறார்.



அதன் பயனாகத்தான் தளபதி விஜய்யுடன் இணைந்து 'வாரிசு' படத்தில் அவரது சகோதரராக நடிக்கும் மிகப்பெரிய வாய்ப்பு ஷாமை தேடி வந்தது. சமீபத்தில் பொங்கல் பண்டிகை வெளியீடாக ரிலீசான வாரிசு திரைப்படம் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றதுடன் அதில் நடித்துள்ள ஷாமின் நடிப்புக்கும் பாராட்டுக்களைத் தேடி தந்துள்ளது.

அதுமட்டுமல்ல புதிய பட வாய்ப்புகளையும் அவருக்கு பெற்று தந்துள்ளது.

அந்த வகையில் தற்போது ஒளிப்பதிவாளரும் இயக்குநருமான விஜய் மில்டன் இயக்கிவரும் புதிய படத்தில் நடித்து வருகிறார் ஷாம். இந்த படத்தில் அவருக்கு ஜோடியாக நடிகை ரம்யா நம்பீசன் நடிக்கிறார். இந்த படத்தின் படப்பிடிப்பு தற்போது நடைபெற்று வருகிறது.

இதற்கு முன்னதாக விஜய் ஆண்டனி மற்றும் சரத்குமாரை வைத்து விஜய் மில்டன் இயக்கிய மழை பிடிக்காத மனிதன் படம் ரிலீஸுக்கு தயாராக இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.. விஜய் மில்டன் படத்தை தொடர்ந்து இன்னும் சில முக்கியமான இயக்குநர்களின் படங்களில் நடிப்பதற்காக நடிகர் ஷாமுடன் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. வாரிசு படத்தின் வெற்றியில் மகிழ்ந்திருக்கும் ஷாம், இனிவரும் வருடங்களில் தன்னுடைய படங்கள் சீரான இடைவெளியில் வெளியாகும் என உறுதி செய்துள்ளார். இதன் அறிகுறி விஜய் மில்டன் படம் மூலமாகவே தெரிய ஆரம்பித்திருக்கிறது.

# ஓடிடி ஒப்பந்தங்கள் அடிப்படையில் திரைப்படம், வெப் சீரிஸ், தொலைக்காட்சி தொடர் தயாரிப்பாளர்களுக்கு நிதி உதவி செய்ய புதிய முயற்சியை முன்னெடுத்திருக்கும் ProducerBazaar.com மற்றும் BetterInvest.club

சென்னை, பிப்ரவரி 06 2023: ஓடிடி தளங்கள் அல்லது இசை நிறுவனங்கள் உடன் ஒப்பந்தம் செய்யும் பொழுது அதற்கான தொகையை தவணை முறையில் வழங்குவது திரைத்துறையில் பின்பற்றப்பட்டு வரும் வழக்கம் ஆகும். திரைப்பட ஒளிபரப்பு உரிமையை வாங்கும் தொலைக்காட்சி நிறுவனங்களும் இப்போது இந்த முறையை பின்பற்ற ஆரம்பித்துவிட்டன. இதனால் திரைப்பட, வலைத்தொடர் மற்றும் தொலைக்காட்சி தொடர் உள்ளிட்டவற்றின் தயாரிப்பாளர்களின் அடுத்தடுத்த படங்கள் உருவாகி வெளிவருவதற்கு நிதி ரீதியாக தாமதமாகும் சூழல் ஏற்படுகிறது.




இந்த சிக்கலை தயாரிப்பாளர்கள் எதிர்கொண்டு தொடர்ந்து அவர்கள் தயாரிப்பில் ஈடுபட உதவும் வகையிலும், முறைப்படுத்தப்பட்ட கடன் வசதி போதிய அளவில் திரை உலகில் இல்லை என்பதை கருத்தில் கொண்டும் **ProducerBazaar.com** (முன்னதாக ஆரக்கிள் மூவீஸ்) **BetterInvest.club** என்கிற நிதி நிறுவனத்துடன் கை கோர்த்து ஒரு புதிய முயற்சியை முன்னெடுத்துள்ளது. இந்த முயற்சியின் மூலம் ஓடிடி தளம், இசை நிறுவனம் அல்லது தொலைக்காட்சி சேனலுடன் ஒப்பந்தம் செய்துள்ள தயாரிப்பாளருக்கு 7 முதல் 10 நாட்களுக்குள் நிதி வழங்கப்படும். இந்த நிதியை பெறுவதற்கு எந்த ஒரு பிணையும் தேவை இல்லை. மேற்கண்டவற்றுடன் தயாரிப்பு நிறுவனம் செய்து கொண்ட ஒப்பந்தம் மட்டுமே போதுமானது. தற்போது வரை 4 படங்களுக்கு இவ்வாறு நிதி உதவி செய்யப்பட்டுள்ளது. தமிழ் மட்டுமின்றி, தெலுங்கு, மலையாளம் மற்றும் கன்னடம் உள்ளிட்ட பிற மொழி தயாரிப்பாளர்களுக்கும் நிதி வழங்கும் வசதியை **ProducerBazaar.com** மற்றும் **BetterInvest.club** துவங்கியுள்ளனர். இந்த முயற்சி குறித்து, **BetterInvest.club** நிறுவனர் பிரதீப் சோமு கூறுகையில், "மீடியா மற்றும் பொழுதுபோக்குத் துறைக்கு முறைப்படுத்தப்பட்ட நிதியுதவி கிடைப்பதில்லை. பெட்டர்இன்வெஸ்டில், ஓடிடிகள், ஆடியோ லேபிள்கள் மற்றும் சேட்டிலைட் நெட்வொர்க்குகள் உடன் தயாரிப்பாளர்கள் செய்து கொள்ளும் ஒப்பந்தங்கள் அடிப்படையில் தயாரிப்பு நிறுவனங்களுக்கு குறைந்த வட்டியில் நிதி வழங்குகிறோம். திரைப்படத் துறைக்கு நிதியளிக்கப்பட்டு வந்த விதத்தை இது மாற்றி அமைப்பதோடு தயாரிப்பு நிறுவனங்கள் தங்கள் வணிகத்தின் மீது சிறந்த கட்டுப்பாட்டை வைத்திருக்க உதவுகிறது," என்றார்.

**ProducerBazaar.com** நிறுவனத்தின் இணை நிறுவனர் ஜி கே திருநாவுக்கரசு கூறுகையில், "திரைப்படங்கள் முடிவடையும் தருவாயில் இருக்கும் தயாரிப்பாளர்களுக்கு பணத் தட்டுப்பாடு ஒரு தடையாக இருந்து வருகிறது. பல படங்களை அடுத்தடுத்து தயாரிக்கும் தயாரிப்பாளர்களிடமும் இது காணப்படுகிறது. பெட்டர்இன்வெஸ்டின் இந்த திட்டம் தயாரிப்பாளர்கள் தங்கள் திரைப்படங்களின் வணிகங்களை திட்டமிடுவதற்கு சுதந்திரத்தை வழங்குகிறது," என்று தெரிவித்தார். தொழில்நுட்ப வல்லுநர் செந்தில் நாயகம் மற்றும் திருநாவுக்கரசு ஆகியோர் இணைந்து தொடங்கியுள்ள **ProducerBazaar.com** திரைத்துறையின் வளர்ச்சிக்காக பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# "காதல் கண்டிசன்ஸ் அப்ளை" திரைப்பட இசை வெளியீட்டு விழா



சென்னை, பிப்ரவரி 06 2023: நிதின் சத்யாவின் ஷ்வேத் நிறுவன தயாரிப்பில் லிப்ரா ப்ரோடக்ஷன்ஸ் ரவீந்தர் வழங்கும், இயக்குநர் அரவிந்த் இயக்கத்தில், மஹத் நடிப்பில் இக்கால இளைஞர்களை கவரும் வண்ணம் உருவாகியுள்ள காதல் திரைப்படம் "காதல் கண்டிசன்ஸ் அப்ளை". விரைவில் திரைக்கு வரவுள்ள இப்படத்தின் இசை வெளியீட்டு விழா திரைப்பிரபலங்கள் மற்றும் படக்குழுவினர் கலந்து கொள்ள கோலாகலமாக நடைபெற்றது. இந்நிகழ்வினில் நடிகர் தயாரிப்பாளர் நிதின் சத்யா பேசியதாவது..,

"இது பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த ஜாலியான ஒரு பீல் குட் திரைப்படம். இந்த படம் கோவிட் காரணமாக சிறிது தாமதமானது. ஆனால் படத்தில் நடித்த அனைவரும் இந்த படத்திற்காக தங்களது முழு ஆதரவையும் கொடுத்தனர். பலருடைய உத்வேகத்தாலும், உதவியாலும் இந்த படம் நன்றாக உருவாகி இருக்கிறது. இந்த படத்திற்கு உதவியாக இருந்த அனைவருக்கும் எனது நன்றிகள். நல்ல நட்புடன் சேர்ந்து நல்ல படைப்பை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் உருவானது தான் இந்த படம்."

பாடலாசிரியர் மதன் கார்க்கி கூறியதாவது..,

"ரவீந்தர் கலைஞர்களை மதிக்க கூடியவர். அவருடைய இந்த படம் வெற்றியடைய எனது வாழ்த்துகள். இந்தப் படத்தின் இசையமைப்பாளர் எனது நண்பர், அவருக்கு இது தான் முதல் படம் என்பது எனக்கு ஆச்சர்யமளிக்கிறது. படத்தின் பாடல்கள் சிறப்பாக இருக்கின்றன."

நடிகர் ராதாரவி பேசியதாவது..,

"நிதின் சத்யா, ரவிந்தர் இருவரும் எனது நீண்ட கால நண்பர்கள். நிதின் போன்ற உழைப்பாளிகளுக்கு உதவுவது அனைவரது கடமை. திரைக்கலைஞர்களுக்கு உதவும் எண்ணம் கொண்டவர் ரவீந்தர். அவர் அழைத்ததால் தான் இந்த விழாவிற்கு வந்தேன். இந்த படம் வெற்றியடைய எனது வாழ்த்துகள்."

தயாரிப்பாளர் எஸ் ஆர் பிரபு பேசியதாவது...

"காதல் படங்கள் இப்போது தமிழ் சினிமாவின் தேவை. தொடர்ந்து வெற்றிகரமான படங்களை எடுத்து வரும் தயாரிப்பாளருக்கு எனது வாழ்த்துகள். இந்த படத்தின் இசையமைப்பாளர் ரமேஷ், அடுத்து தோனியின் தயாரிப்பில் படம் இயக்குகிறார், அவர் திறமைசாலி, அவருக்கு எனது வாழ்த்துகள். இந்த படம் பார்ப்பதற்கு நன்றாக இருக்கிறது, வெற்றிபெற வாழ்த்துகள்."

தயாரிப்பாளர் முரளி பேசியதாவது..,

"இந்த படம் கோவிட் காலத்தில் மாட்டிகொண்டது. அதை தாண்டி தான் இந்த படம் இப்போது தயாராகி உள்ளது. இது போன்ற படங்கள் தான் இப்போது தேவை. லவ் டுடே போன்ற பொழுதுபோக்கு திரைப்படமாக இது அமையும் என்று நம்புகிறேன். படக்குழுவிற்கு எனது வாழ்த்துகள்."

நடிகர் விவேக் பிரசன்னா பேசியதாவது..,

"இந்த படம் எல்லோருக்கும் பிடித்தமான, ஜனரஞ்சகமான படமாக வந்து இருக்கிறது. இந்த படம் எல்லோருடைய வாழ்கையிலும் நடந்த ஒரு நிகழ்வாக இருக்கும். அதனால் எல்லோருக்கும் இந்த படம் ஒத்துப்போகும். படம் பார்த்துவிட்டு உங்கள் எண்ணங்களை கூறுங்கள். இப்படத்திற்கு ஆதரவு தாருங்கள் நன்றி."

தயாரிப்பாளர் சி வி குமார் கூறியதாவது..,

"படத்தின் இசையமைப்பாளர் பல்வேறு திறமைகள் கொண்டவர், அவருக்கு எனது வாழ்த்துகள். நடிகர் மகத்துக்கு இந்த படம் வெற்றிப்படமாக அமைந்து அடுத்தடுத்து வெற்றிப்படங்கள் குவிய வாழ்த்துகள். தயாரிப்பாளருக்கு இந்த படம் வெற்றி படமாக அமைய வாழ்த்துகள்."

நடிகர் அபிஷேக் பேசியதாவது..,

"காதல் படங்கள் எடுப்பதற்கு ஒரு பொறுப்பு தேவை. படம் வெளியான பிறகு, ஒளிப்பதிவாளர் அனைவராலும் பேசப்படுவார். நிதின் சத்யா அனைவருக்கும் இடம் கொடுக்க ஆசைப்படுபவர். அனைவரையும் மேலே தூக்கி விட கூடியவர். இயக்குநர் உடைய அர்ப்பணிப்பு அனைவரையும், அவருடன் இணைந்து பயணிக்க வைக்கிறது. இந்த படத்திற்கு வெற்றிகள் குவிய வேண்டும்."

ஒளிப்பதிவாளர் கார்த்திக் நல்லமுத்து பேசியதாவது..,

"எனக்கு முழு சுதந்திரமும், எனக்கு தேவையான அனைத்தையும் கொடுத்த தயாரிப்பாளருக்கும், இயக்குநருக்கும் எனது நன்றிகள். இந்த படத்தில் நடித்த அனைவரும் அதிக ஒத்துழைப்பு கொடுத்தனர். இந்த படம் வெற்றியடைய வாழ்த்துகள்."

இசையமைப்பாளர் தமிழ்மணி கூறியதாவது..,

"எனக்கு வாய்ப்பளித்த தயரிப்பாளருக்கும், இயக்குநருக்கும் நன்றி. இந்தப் படம் நண்பர்களுடன் சேர்ந்து பயணித்த ஒரு படம். இந்த படம் வெற்றியடைய எனது வாழ்த்துகள்."

நடிகை சனா கூறியதாவது..,

"என்னை இந்த படத்தில் நடிக்க வைத்ததற்கு தயாரிப்பாளருக்கும், இயக்குநருக்கும் நன்றி. மொழி தெரியாத எனக்கு காட்சிகளை சரியாக புரிய வைத்து, என்னை நடிக்க வைத்ததற்கு இயக்குநருக்கு நன்றி. என்னை அழகாக காட்டிய ஒளிப்பதிவாளருக்கு நன்றி. இந்த படத்தில் பணியாற்றிய அனைவருக்கும் எனது நன்றிகள். இந்த படத்திற்கு உங்களது ஆதரவு தாருங்கள்."

இயக்குநர் ஆர் அரவிந்த் பேசியதாவது..,

"புது இயக்குநர்களை வைத்து படம் எடுப்பதில் பொருளாதார சிக்கல் இருக்க தான் செய்கிறது. அதை தாண்டி தயாரிப்பாளர் நிதின் சத்யா, ரவீந்தர் தொடர்ந்து புதுமுகங்களுக்கு வாய்ப்பு அளிக்கிறார்கள், அதற்கு நன்றிகள். இது தொடர வேண்டும். இந்த படத்தில் என்னுடன் பயணித்த அனைவருக்கும் எனது நன்றிகள்."

நடிகர் மகத் கூறியதாவது..,

"இது எனது 16 ஆவது படம், ஆனால் ஹீரோவாக முதல் படம். எனது நண்பர் நிதின் சத்யா, கோவிட் காலத்தில் என்னை அணுகி படம் பண்ணலாம் என்று கூறினார். இயக்குநர் அரவிந்த் உடன் பல ஆண்டுகளாக பயணித்து இருக்கிறேன், அவருடன் படம் செய்தது மகிழ்ச்சி. இசையமைப்பாளர் ரமேஷ் இந்த படத்தில் அறிமுகமானது எனக்கு மகிழ்ச்சி. ஒளிப்பதிவாளர், நடிகர்கள் அனைவரும் இந்த படத்தை மேம்படுத்தியுள்ளனர். இந்த படம் பொருளாதார சிக்கலில் சிக்கி இருந்த போது, ரவீந்தர் தான் உதவினார். அவருக்கு எனது நன்றிகள். நிதின் சத்யா, ரவீந்தர் போன்ற ஆட்கள் தமிழ் சினிமாவிற்கு தேவை. அனைவருக்கும் நன்றிகள்."

தயாரிப்பாளர் ரவீந்தர் கூறியதாவது..,

"நிதின் சத்யாவிற்கும், எனக்கும் இடையேயான புரிதல் சிறப்பானதாக இருக்கும். திரைப்படத்தை அதிக ஆர்வத்துடன் எடுக்க கூடியவர் நிதின். மகத் போன்ற நடிகர்கள் தமிழ் சினிமாவிற்கு தேவை, விவேக் பிரசன்னா போன்ற ஆகச்சிறந்த நடிகர்கள் கொண்டாடப்பட வேண்டியவர்கள், இவர்கள் இந்த படத்தில் இருப்பது மகிழ்ச்சி. இந்த படத்தின் தொழில்நுட்ப கலைஞர்கள் அனைவரும் அறிவும், திறமையும் அதிகமாக உடையவர்கள். இந்த படம் கண்டிப்பாக வெற்றியடையும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. நான் தயாரித்ததில் இந்த படம் தான் எனக்கு ஒரு லாபகரமான படமாக அமைந்துள்ளது. அனைவருக்கும் நன்றிகள்."

# ரஷ்யா போகிறான் மாமனிதன்

**சென்னை, பிப்ரவரி 06 2023: ரஷ்ய அரசு 44 வருடங்களாக மாஸ்கோ சர்வதேச திரைப்பட விழாவை நடத்தி வருகிறது. ஏப்ரல் 20 முதல் 27 வரை நடைபெறும் 45வது மாஸ்கோ சர்வதேச திரைப்பட விழாவில் நம் மாமனிதன் திரைப்படத்தை உலக சினிமா என்ற பிரிவில் தேர்வு செய்யப்பட்டு திரையிடுகிறார்கள்.**



**இவ்விழாவில் பங்கேற்க மாமனிதன் பட குழுவினரை வரவேற்று அழைப்பிதழ் அனுப்பி உள்ளார்கள்.**

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி
திங்கள்கிழமை,
பிப்ரவரி 06, 2022

# ஹோகர் கன்ட்ரோல்ஸ் அண்ட் சூப்பர் சர்ஃபேசஸ் முதன்முதலில் சென்னையில் அனுபவ மையத்தை அறிமுகப்படுத்தியுள்ளது




சென்னை, பிப்ரவரி 06 2023: ஹோகர் கன்ட்ரோல்ஸ், இந்தியாவில் இயங்கி வரும் அமெரிக்க ஐக்கிய நாடுகளைத் தளமாகக் கொண்டு, ஹோம் ஆட்டோமேஷன், ரெட்ரோஃபிட் தீர்வுகளை உற்பத்தி செய்யும் முன்னணி நிறுவனமாக விளங்குகிறது. சூப்பர் சர்ஃபேசஸ்கள் என்பது ஆடம்பரச் சுவர் மேற்பரப்புகளின் வடிவமைப்பு, பயன்பாடு மற்றும் விநியோகம் ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்ற முதல் இந்திய நிறுவனம். இன்று சென்னை எழும்பூரில் உள்ள பில்ட் எச்கியூ - வில் முதன்முதலாக அனுபவ மையத்தை தொடங்கியுள்ளது. பில்ட் எச்கியூ என்பது 1 லட்சம் சதுர அடி பரப்பளவைக் கொண்ட இந்தியாவின் மிகப்பெரிய கட்டிடப் பொருள் மற்றும் உட்புற வடிவமைப்பு சூப்பர் ஸ்டோர் ஆகும். இதில் ஒரே கூரையின் கீழ் 70க்கும் மேற்பட்ட ஆடம்பர பிராண்டுகள் அமைந்துள்ளன.

ஹோகர் கன்ட்ரோல்ஸ் அண்ட் சூப்பர் சர்ஃபேசஸின் முன்னணி ஷோரூமை, ஐஐஐடி-யின் சென்னை மண்டலப் பிரிவின் மாண்பமை தலைவர் திரு. ரவி மீனாட்சி சுந்தரம், ஐஐஐடி சென்னை மண்டலத்தின் மாண்பமை செயலாளர் திரு. பிரனீதா வர்மா, சூப்பர் சர்ஃபேசஸின் தலைமைச் செயல் தலைவர் மனோஜ் மனோகர், ஹோகர் கன்ட்ரோல்ஸ் துணைத் தலைவர் திரு. ஜஸ்பிரீத் சிங் பாட்டியா, ஹோகர் கன்ட்ரோல்ஸ் மண்டல விற்பனைத் தலைவர் திரு. ரவி சிம்ஹா, மற்றும் தேசியத் தலைவர் - சூப்பர் சர்ஃபேஸ் திரு. மகேஷ் நாகேந்திரா ஆகியோர், முன்னணி கட்டிடக் கலைஞர்கள் மற்றும் இண்டீரியர் வடிவமைப்பாளர்கள் முன்னிலையில் திறந்து வைத்தனர்.

ஹோம் ஆட்டோமேஷன் மற்றும் ஆடம்பர சுவர் நேர்த்திகள் துறையில் ஆம்னி - சேனல் வணிகத்தில் கவனம் செலுத்திவந்த ஹோகர் கன்ட்ரோல்ஸ் & சூப்பர் சர்ஃபேசஸ், தென்னிந்தியாவில் தங்கள் விரிவாக்கத் திட்டத்தைத் தொடங்கச் சென்னையைத் தேர்ந்தெடுத்துள்ளனர். ஓர் அதி உயர் தரத்தில் உருவாக்கப்பட்டுள்ள ஸ்மார்ட் ஹோம் தயாரிப்புகளையும் தீர்வுகளையும் காட்சிப்படுத்தியுள்ளதோடு மட்டுமல்லாமல் இந்த அனுபவ மையம் வெனிஸ் பிளாஸ்டர்கள் அல்லது இயற்கை தாதுக்களைப் பயன்படுத்தும் ஆடம்பர சுவர்களையும் காட்சிப்படுத்தி ஒரு முழுமையான புதிய நவீன வாழ்க்கை அனுபவத்தை ஒரே கூரையின் கீழ் வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறது. ஹோகர் கன்ட்ரோல்ஸ் அண்ட் சூப்பர் சர்ஃபேஸ்கள் டெக்விஷ் குழுவுக்கு முற்றிலும் சொந்தமான துணை நிறுவனங்களாகும், இது ஐடி & ஐடிஇஎஸ் தீர்வுகள், திறன் மற்றும் பணியாளர் தீர்வுகள், ஐஓடி & ஹோம் ஆட்டோமேஷன் தயாரிப்புகள் மற்றும் அலங்கார வண்ணப்பூச்சுகள் மற்றும் சொகுசு வீடுகளுக்கான தீர்வுகள் ஆகியவற்றில் வணிக நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் ஒரு பன்முகப்பட்ட உலகளாவிய நிறுவனமாகும்.

முன்னர் ஹோகர் கன்ட்ரோல்ஸ் அனைத்து புதிய அளவிலான ஸ்மார்ட் டச் பேனல்கள், உலகத் தர கன்ட்ரோலர்கள், டிஜிட்டல் டோர் லாக்ஸ் மற்றும் ஸ்மார்ட் கர்ட்டன் மோட்டார்கள் ஆகியவற்றை உலக மற்றும் இந்திய சந்தைகளில் அறிமுகப்படுத்தியுள்ளது. 2019 ஆம் ஆண்டில், நிறுவனம் ஐதராபாத்தில் அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் வடிவமைப்பு சிந்தனையை ஒருங்கிணைக்கும் தயாரிப்புகளை தயாரிப்பதற்காக அதன் அசெம்பிளிங் யூனிட்டை அமைத்தது, இதனால் வீட்டு உரிமையாளர்கள், சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் தொழில்முறை ஒருங்கிணைப்பாளர்களுக்கு புதுமையான, உள்ளுணர்வுமிக்க மற்றும் ஸ்டைலான தயாரிப்புகளை வழங்குகிறது. 2021 ஆம் ஆண்டின் இறுதியில், ஹோகர் கன்ட்ரோல்ஸ் இந்தியாவில் 100க்கும் மேற்பட்ட ஸ்மார்ட் ஹோம் தயாரிப்புகளை உற்பத்தி செய்வதன் மூலம் இணைந்து வாழும் வாழ்க்கையை மறுவரையறை செய்துள்ளது. வயரிங் அல்லது மறுவடிவமைப்பு தேவையில்லாமல் ஏற்கெனவே இருக்கும் எந்த ஸ்விட்ச்போர்டிலும் எளிதில் பொருந்தக் கூடிய முழு அளவிலான ரெட்ரோஃபிட் ஹோம் தீர்வுகளை வழங்குகிறது.

டெக்விஷ் குழுவில் சமீபத்தில் இணைந்த ஒன்றே சூப்பர் சர்ஃபேஸ். இது வெனிஸ் பிளாஸ்டர்கள் அல்லது இயற்கை தாதுக்களைப் பயன்படுத்தி ஆடம்பர சுவர் பரப்புகளின் வடிவமைப்பு மற்றும் விநியோகம் ஆகியவற்றில் பிரத்தியேகமாக நிபுணத்துவம் பெற்ற முதல் இந்திய நிறுவனமாகும். சூப்பர் சர்ஃபேஸ்கள் இத்தாலிய வெனிஸ் பிளாஸ்டர் பூச்சுகள் மற்றும் அலங்கார இயற்கை பிக்மெண்டுகளைப் பயன்படுத்தி மனமயக்கும், பெஸ்போக் வடிவமைப்புகளை உருவாக்குகின்றன. இத்தாலி மற்றும் உலகின் பிற பகுதிகளில் இருந்து கிடைக்கும் இயற்கையான சுண்ணாம்பு மூலம், அசாதாரண சிறப்பு விளைவுகளை அடைய, பல்வேறு வடிவமைப்புகள் மற்றும் வடிவங்களில், மேற்பரப்புகளில் பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டர்களை நிறுவனம் உருவாக்குகிறது.

ஹோகர் கன்ட்ரோல்ஸின் தலைமைச் செயல் அதிகாரியும், சூப்பர் சர்ஃபேஸ்ஸின் இயக்குநருமான திரு. விஷ்ணு ரெட்டி, “குடியிருப்பு மற்றும் வணிக கட்டிடங்களில் ஆட்டோமேஷன் தீர்வுகளுக்கான தேவை அதிகரித்து வருவதாலும், எரிசக்தி திறன் பற்றிய விழிப்புணர்வாலும். ஸ்மார்ட் ஹோம் தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்வதை ஊக்குவிக்கும் அரசின் முன்முயற்சிகளாலும் இந்திய ஸ்மார்ட் ஹோம் சந்தையின் வளர்ச்சி முன்னோக்கிச் செலுத்தப்படுகிறது. அதுமட்டுமல்லாமல், குரல் கட்டுப்பாடு, செயற்கை நுண்ணறிவு (ஏஐ), இயந்திரக் கற்றல் மற்றும் இன்டர்நெட் ஆஃப் திங்ஸ் (ஐஓடி) போன்ற தொழில்நுட்ப முன்னேற்றங்கள் நுகர்வோர் வசதிக்காக மாற்றியமைக்கப்படுகின்றன. மேலும் இந்தத் தேவையை தனித்துவமான முறையில் பூர்த்தி செய்வதற்காக தென்னிந்தியாவின் முதல் அனுபவ மையத்தை நாங்கள் அறிமுகப்படுத்தியுள்ளோம்.

எங்கள் வாடிக்கையாளர்களின், குறிப்பாக இண்டீரியர் வடிவமைப்பாளர்கள் & கட்டிடக் கலைஞர்கள் மற்றும் இறுதிப் பயனர்கள் எங்கள் நவீன வீடுகளில் நிறுவ மற்றும் பயன்படுத்த எளிதான, மேம்பட்ட தொழில்நுட்பத்தின் முதல் அனுபவத்தைப் பெற இந்த அனுபவ மையம் உதவும். எங்கள் வாடிக்கையாளர்களின் மனதில் ஸ்மார்ட் ஹோம் தீர்வுகளின் பாதுகாப்பு, நிலைத்தன்மை மற்றும் தரம் பற்றிய கருத்தைப் பதிக்க நாங்கள் எங்கள் பார்வையாளர்களுடன் இணைந்து ஈடுபட விரும்புகிறோம். இத்துறையில் தற்போதைய முன்னேற்றங்கள் குறித்து அவர்களைப் புதுப்பித்த நிலையில் வைத்திருக்கிறோம். இந்தியா முழுவதும் செயல்பாடுகளை விரிவுபடுத்துவதை இலக்காகக் கொண்டு, ஐதராபாத், மும்பை, சென்னை, பெங்களூர் மற்றும் கொல்கத்தா ஆகிய இடங்களில் எங்கள் அனுபவ மையங்களை மிக விரைவில் தொடங்கவுள்ளோம்” என்று அவர் மேலும் கூறினார்.

சூப்பர் சர்ஃபேசஸின் சீஓஓ திரு. மனோஜ் மனோகர், "சென்னை அனுபவ மையத்தில், எங்கள் வாடிக்கையாளர்களுக்கு மிக உயர்ந்த தரமான ஆடம்பரமான சுவர் ஃபினிஷிங்கையும் ஃபுளோரிங்கையும் வழங்க நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். தூண்கள் - தனிப்பயனாக்கம், படைப்பாற்றல் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய மூன்றை எங்கள் தளம் மற்றும் சுவர் வடிவமைப்புகள் அடிப்படையாகக் கொண்டவை. எங்கள் அனுபவமிக்க வல்லுநர்கள் குழு எங்கள் வாடிக்கையாளர்களுக்கு தனித்துவமான மற்றும் ஆடம்பரமான அனுபவத்தை உருவாக்க முயற்சிக்கிறது. எங்கள் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சுவர் மற்றும் ஃபுளோரிங் தீர்வுகளைக் கொண்டுவந்து சென்னை அனுபவ மையத்தில் எங்கள் பயணத்தைத் தொடர்வதை எதிர்நோக்குகிறோம்.

ஹோகர் கன்ட்ரோல்ஸின் துணைத் தலைவர் திரு. ஜஸ்ப்ரீத் சிங் பாட்டியா கூறும்போது, "எச்என்ஐ சமூகத்தை முதன்மையாக ஈர்க்கும் எங்களது தற்போதைய பிரீமியம் தயாரிப்புகளுக்கு மேலதிகமாக, இறுதி நுகர்வோரின் தேவைகளை மனதில் வைத்து வடிவமைக்கப்பட்ட எங்கள் புதிய ஹோகர் எலைட் தயாரிப்புகள் மற்றும் தீர்வுகள் பெரிய சந்தையின் தேவைகளை நிறைவு செய்கின்றன. தற்போது, ஒரே கூரையின் கீழ் முழுமையான ரெட்ரோஃபிட் மற்றும் வயர்லெஸ் ஸ்மார்ட் ஹோம் ஆட்டோமேஷன் மற்றும் பாதுகாப்பு தீர்வுகளை வழங்கும் ஒரே பிராண்ட் நாங்கள்தான்”.

# ஹோண்டா மோட்டார் சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர் இந்தியா, அண்ணாநகரில் பிக்விங்கைத் திறந்து வைத்தது




சென்னை, பிப்ரவரி 06 2023: நாடு முழுவதும் உள்ள பிரீமியம் மோட்டார்சைக்கிள் வாடிக்கையாளர்களுக்கு வித்தியாசமான அனுபவத்தை வழங்கும் வகையில், ஹோண்டா மோட்டார்சைக்கிள் & ஸ்கூட்டர் இந்தியா அண்ணா நகரில் (தமிழ்நாடு) அனைத்து புதிய பிரீமியம் பெரிய பைக் விற்பனை மற்றும் சேவை மையமான, ஹோண்டா பிக்விங் ஐத் திறந்து வைத்தது. சென்னை - 600102, அண்ணாநகர் கிழக்கு, 3வது அவென்யூ, கதவு எண். எம்78/6, தரைத்தளம் இல் அமைந்துள்ள இந்த வசதி, புதிய மற்றும் வருங்கால வாடிக்கையாளர்களிடையே #கோரைடின் உணர்வை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

அண்ணாநகரில் பிக்விங்கின் தொடக்க விழாவில் பேசிய ஹோண்டா மோட்டார்சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர் இந்தியாவின் நிர்வாக இயக்குநர், தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி திரு. அட்சுஷி ஒகடா, "வாடிக்கையாளருக்கு உண்மையான வித்தியாசமான அதிவேக அனுபவத்தை அருகாமையில் வழங்க, ஹோண்டா பிக்விங் ஐ (ஹோண்டாவின் பிரத்யேக பிரீமியம் மோட்டார்சைக்கிள் நெட்வொர்க்) விரிவாக்குவதில் எங்கள் கவனம் உள்ளது. இன்று, அண்ணாநகரில் பிக்விங் ஐத் திறந்து வைப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த புதிய பிரீமியம் விற்பனை நிலையத்தின் மூலம், அண்ணாநகரில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு ஹோண்டாவின் வேடிக்கையான மோட்டார் சைக்கிள்களை அருகாமையில் கொண்டு செல்வதையும்,

எங்களின் நடுத்தர அளவிலான பிரீமியம் மோட்டார்சைக்கிள்களை அனுபவத்திற்கு கொண்டுவருவதையும் நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம்."என்று கூறினார்.

ஆர்வமுள்ள வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்ய அவர்களின் கடைசி எல்லை இருப்பை விரிவுபடுத்தி, வேறுபட்ட சில்வர் விங் ஐ, 100 க்கும் மேற்பட்ட செயல்பாட்டு அணுகக்கூடிய இடங்களில் அனுபவிக்க முடியும். தமிழ்நாடு மாநிலத்தில், இந்த நிறுவனம் தற்போது எச்எம்எஸ்ஐ இன் அற்புதமான பிரீமியம் வழங்கல்களுடன் 11க்கும் மேற்பட்ட விற்பனை நிலையங்களை இயக்குகிறது.

# ஸ்டார் ஹெல்த் அண்ட் அலைட் இன்சூரன்ஸ், டிசம்பர் 31, 2022 இல் முடிவடைந்த ஒன்பது மாதங்களுக்கு, மொத்த எழுதப்பட்ட பிரீமியமாக ரூ. 8,753 கோடியை பதிவு செய்கிறது

சென்னை, பிப்ரவரி 06 2023: நாட்டின் முன்னணி உடல்நலக் காப்பீட்டு நிறுவனங்களில் ஒன்றான ஸ்டார் ஹெல்த் அண்ட் அலைட் இன்சூரன்ஸ், 2022-23 நிதியாண்டில், டிசம்பர் 31, 2022 நிலவரப்படி ஒன்பது மாதங்களில், கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தை விட 13% அதிகமாக ரூ.8,753 கோடியின் மொத்த எழுதப்பட்ட பிரீமியத்தை பதிவு செய்துள்ளது. பெருநகரங்கள் முதல் நாட்டின் உள்பகுதிகள் வரையிலான வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய சில்லறைக் காப்பீட்டில் தெளிவான கவனம் செலுத்துவதன் மூலம், டிசம்பர் 31, 2022 இல் முடிவடைந்த 9 மாதங்களில் இந்த நிறுவனத்தின் சில்லறை சுகாதார பிரீமியம், கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியை ஒப்பிடும்போது 19% அதிகரித்து ரூ. ரூ.8,046 கோடியாக வளர்ந்தது.

ஸ்டார் ஹெல்த் நிறுவனத்தின் வரிக்குப் பிந்தைய லாபம் டிசம்பர் 31, 2022 இல் முடிவடைந்த காலாண்டில் ரூ. 210 கோடியாகவும், டிசம்பர் 31, 2022 இல் முடிவடைந்த காலப்பகுதியில் ரூ. 517 கோடியாகவும் இருந்தது.

டிசம்பர் 31, 2022 நிலவரப்படி, இந்த நிறுவனத்தின் கடன்தொகை விகிதம் 2.17 மடங்கு என்ற அளவில் தொடர்ந்து வலுவாக உள்ளது, இது குறைந்தபட்ச ஒழுங்குமுறைத் தேவையான 1.5 மடங்கை விட அதிகமாகும்.

வலுவான வங்கி காப்பீட்டு விநியோக அமைப்பு , ஏஜென்சி விநியோக அமைப்பு , பிற கார்ப்பரேட் முகவர்கள், தரகர்கள், பாயின்ட் ஆஃப் சேல் நபர்கள், இன்சூரன்ஸ் மார்க்கெட்டிங் நிறுவனங்கள், இணைய திரட்டிகள் மற்றும் நேரடி வணிகம் ஆகியவற்றை உள்ளடக்கிய பயிற்சி பெற்ற காப்பீட்டு நிபுணர்களின் பல்வகை விநியோக வலையமைப்பை இந்த நிறுவனம் கொண்டுள்ளது.

அதன் வாடிக்கையாளர்களுக்கு ரொக்கமில்லா உடல்நல வசதிகளுக்கு அதிக அணுகலை வழங்கும் நோக்கத்துடன், ஸ்டார் ஹெல்த், மருத்துவமனைகளுடனான அதன் கூட்டாண்மையை விரிவுபடுத்தியது மற்றும் அதன் நெட்வொர்க் இந்தியா முழுவதும் 13,844 மருத்துவமனைகளாக வளர்ந்ததைக் கண்டது. இந்த காலாண்டில், நிறுவனம் இந்தியா முழுவதும் தனது கிளை அலுவலக இருப்பை கூடுதலாக 15 அலுவலகங்கள் மூலம் அதிகரித்து, நாடு முழுவதும் 830 கிளை அலுவலகங்களாக அதன் இருப்பை வலுப்படுத்தியது.

ஸ்டார் ஹெல்த் அண்ட் அலைட் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டின் நிர்வாக இயக்குநர் திரு. ஆனந்த் ராய், “கடந்த காலாண்டில், சேவையின் சிறப்பை மையமாகக் கொண்டு, இயக்கச் செலவுகளைக் குறைத்து, எங்கள் விநியோக கூட்டாளர்களுடன் எங்கள் ஒத்துழைப்பை விரிவுபடுத்துதலுடன், எங்கள் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதில் தொடர்ந்து முதலீடு செய்துள்ளோம். கடந்த காலாண்டில் எங்களின் முகவர்களின் எண்ணிக்கை அதிகரித்து தற்போது 6.1 லட்சமாக உள்ளது. எங்கள் வங்கி காப்பீடு மற்றும் இன்சூர்டெக் கூட்டாளர்களுடன் உறவுகளை வலுப்படுத்துவதை நாங்கள் தொடர்ந்து காண்கிறோம், இது எங்கள் வலுவான வளர்ச்சிக்கு பங்களிக்கிறது. டிஜிட்டல் துறையில் முன்னேற ஒரு வலுவான பொறியியல் அடித்தளத்தை நாங்கள் அமைத்துள்ளோம், இது வாடிக்கையாளர் கையகப்படுத்தல், ஈடுபாடு மற்றும் உரிமைகோரல் தீர்வுகளில் தொடங்கி ஒவ்வொரு செயல்பாடுகளிலும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த எங்களுக்கு உதவியது." என்று கூறினார்.

நாங்கள் தயாரிப்பு கண்டுபிடிப்புகளில் தொடர்ந்து அதிக முதலீடு செய்து வருகிறோம் மற்றும் வாடிக்கையாளர்களின் மாறிவரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளோம். எங்கள் வலுவான செயல்திறன், வாடிக்கையாளர் கவனம் மற்றும் நாட்டில் காப்பீட்டு ஊடுருவலை மேலும் அதிகரிப்பதற்கான எங்கள் அர்ப்பணிப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, நிலையான லாபகரமான வளர்ச்சியில் நாங்கள் கவனம் செலுத்துகிறோம்" என்று ஸ்டார் ஹெல்த் அண்ட் அலைட் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டின் நிர்வாக இயக்குநர் டாக்டர் எஸ் பிரகாஷ் கூறினார்.

ஸ்டார் ஹெல்த் 31 டிசம்பர் 2022 நிலவரப்படி இந்திய பொதுக் காப்பீட்டுத் துறையில் 33% சில்லறை சுகாதார சந்தைப் பங்கைக் கொண்டுள்ளது.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# ஆஸ்ட்ரேட், தோல் துறையில் முன்னேற்றம் காணும் வகையில் தோல் துறை திறன் கூட்டமைப்பு உடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது!




சென்னை, பிப்ரவரி 06 2023: ஆஸ்திரேலிய வர்த்தக மற்றும் முதலீட்டு ஆணையமானது (ஆஸ்ட்ரேட் - ஆஸ்திரேலிய அரசு முகமை), தொழில்நுட்ப தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காகவும், தோல் துறையில் ஆஸ்திரேலிய பயிற்சித் தரங்களை அறிமுகப்படுத்துவதற்காகவும் தோல் துறை திறன் கூட்டமைப்பு உடன் இணையும் வகையில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. ஆஸ்ட்ரேட் இந்தியாவின் ஃப்யூச்சர் ஸ்கில்ஸ் இனிஷியேட்டிவ் டீம் எனப்படும் எதிர்காலத் திறன்களைச் செயல்படுத்தும் குழு மூலமாக இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் செயல்படுத்தப்படும்.

ஆஸ்ட்ரேட் ஃப்யூச்சர் ஸ்கில்ஸ் இனிஷியேட்டிவ் அமைப்பும் தோல் துறை திறன் கூட்டமைப்பும் முக்கிய திட்டங்களில் ஒன்றிணைந்து செயல்பட இருக்கின்றன. இந்த இரு அமைப்புகளின் கூட்டு செயல்பாட்டின் மூலம் தோல் துறையில் சுற்றுச்சூழலுக்கு உகந்த நிலைத்தன்மையில் அதிக கவனம் செலுத்தபட உள்ளது. இதன் தொடர்ச்சியாக நிகர பூஜ்ய மதிப்பு, தொழில் துறை 4.0, மெய்நிகர் மற்றும் மேம்படுத்தப்பட்ட அசல் உணர்வை அளிக்கும் ஆக்மெண்டட் ரியால்டி மற்றும் இதர செயல்பாடுகளில் ஆஸ்திரேலியத் திறன்கள் மற்றும் நிபுணத்துவத்தை அறிமுகப்படுத்த இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

3டி பிரிண்டிங், தயாரிப்பு வடிவமைப்பு, தானியக்க பொறியியல், 3டி ஸ்கேனிங், கணினிமயமாக்கப்பட்ட தையல் எந்திரச் செயல்பாடுகள், கணினிமயமாக்கப்பட்ட தோல் வெட்டும் எந்திரச் செயல்பாடுகள், தானியக்க எந்திர செயல் குறியீட்டு உருவாக்கம், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப அடிப்படையில் இயங்கும் தரக் கண்காணிப்பு மற்றும் பல தளங்கள் தொடர்புள்ள வேலைவாய்ப்புகளில், இரு தரப்பின் ஒப்புதலோடு கவனம் செலுத்த வகை செய்யும் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம். தோல் துறையில் தொழில்நுட்பம் மற்றும் தொழிற்கல்வி பயிற்சி தொடர்பான நிபுணத்துவத்தைப் பரஸ்பரம் பரிமாறிக்கொள்வது இரு தரப்பிற்கும் உதவிகரமாக இருக்கும். திறன் மேம்பாடு, நிபுணர்கள் மேற்பார்வை மற்றும் இதர திட்டங்கள் தொடர்பான இணையக் கருத்தரங்குகள், அமர்வுகள், மாநாடுகள் மூலமாக இது மேற்கொள்ளப்படும். இது பற்றி ஆஸ்திரேலிய வர்த்தக மற்றும் முதலீட்டு ஆணையத்தின் (ஆஸ்ட்ரேட்) வர்த்தக ஆணையர் திரு.லியோ ப்ரமானிஸ் பேசுகையில், “இந்தியாவில் தோல் துறை பணியாளர்களின் திறன்களை மேம்படுத்தும் நோக்கில் தோல் துறை திறன் கூட்டமைப்பு உடன் இணைந்து செயல்படுவதில் மகிழ்ச்சியடைகிறோம். இந்த பயிற்சித் திட்டமானது அதிநவீனமானது; இது, இந்தியப் பணியாளர்களின் திறன், கற்றல், மதிப்பீடு, பணி நோக்கங்களுக்கு ஏற்ப செயல்படுத்தப்படும். இந்தியாவில் தோல் துறை போட்டிகரமானதாக விளங்கவும், எதிர்காலத்திற்கேற்ப தயார்நிலையில் இருக்கவும் அது சார்ந்த தொழில்நுட்பம், நிபுணத்துவம், அறிவு ஆகியவை ஒன்றிணைந்த ஒன்றாக முயற்சியாக இது அமையும் என்று தெரிவித்தார். முக்கியத்துவம் வாய்ந்த இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிடுதலின் போது தோல் துறை திறன் கூட்டமைப்பு சார்பாக அதன் தலைமை செயல் அதிகாரி திரு. ராஜேஷ் ரத்னம் கலந்து கொண்டார்.

# ஒரு நம்பகமான, குடும்பத்திற்கு ஏற்ற, நீண்ட காலம் நீடிக்கும் பவர்ஹவுஸ் ஆன, நோக்கியா டி21 -ஐ அறிமுகப்படுத்துகிறோம்

சென்னை, பிப்ரவரி 06 2023: நோக்கியா ஃபோன்களின் தாயகமான எச் எம் டி குளோபல், இன்று இந்தியாவில் நோக்கியா டி21 டேப்லெட்டை அறிமுகம் செய்வதாக அறிவிக்கிறது. நோக்கியா டி21 ஆனது, பாணியில் சமரசம் செய்யாமல் நீடித்து நிலைத்திருப்பதற்கு முதலிடம் கொடுத்து, உகந்த இணைப்பிற்காக ஆண்டெனாவுக்கான 60% மறுசுழற்சி செய்யப்பட்ட பிளாஸ்டிக் கவர் ஐ உள்ளடக்கிய கடினமான அலுமினிய கட்டமைப்புடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. நோக்கியா டி21, ஃபிளாஷ் உடன் கூடிய 8எம் பி பின்புற கேமரா மற்றும் 8எம் பி முன் கேமராவுடன் வருகிறது. குடும்பத்திற்கு ஏற்ற இந்த சிறந்த டேப்லெட், வேலைக்காகவோ அல்லது விளையாட்டுக்காகவோ எதுவாக இருந்தாலும், நீண்ட காலத்திற்கு அதில் உள்ளது. இது முன்னணி மென்பொருள் மற்றும் பாதுகாப்பு வாக்குறுதிகளுடன் வருகிறது,மேலும், இது எச் டி வீடியோ ஸ்ட்ரீமிங், குரல் அழைப்பு மற்றும் என் எஃப் சி போன்ற ரசிகர்களால் கோரப்பட்ட அம்சங்களுடன் நிரப்பப்பட்டுள்ளது.

எச்எம்டி குளோபல் துணைத் தலைவர்- இந்தியா & மீனா சன்மீத் சிங் கோச்சார், "எங்கள் வளரும் டேப்லெட் போர்ட்ஃபோலியோ எங்கள் பார்வையாளர்களிடையே மிகவும் பிரபலமாக உள்ளது. நோக்கியா டி 20யின் வெற்றியில் உருவான, புதிய நோக்கியா டி 21 வேலை மற்றும் விளையாட்டு ஆகிய இரண்டிற்கும் முழுமையாக வடிவமைக்கப்பட்டுள்ளது. நீங்கள் உங்கள் வேலையில் கவனம் செலுத்த வேண்டும் என்றாலும் அல்லது வீட்டில் உங்கள் அன்புக்குரியவர்களுடன் ஓய்வெடுக்க வேண்டும் என்றாலும், நோக்கியா டி 21 அனைத்தையும் செய்து விரைவாக மாற்றியமைக்க முடியும். இது நீண்ட கால பேட்டரி, முறையான மென்பொருள் மற்றும் பாதுகாப்பு புதுப்பிப்புகள், பிரீமியம் ஐரோப்பிய-கட்டமைக்கப்பட்ட அனுபவம் மற்றும் தோற்றம் ஆகியவற்றின் எங்கள் வாக்குறுதியை உள்ளடக்கியது. நோக்கியா டி21, எஸ்.ஜி.எஸ் குறைக்கப்பட்ட நீல ஒளி சான்றிதழுடன் 10.3 இன்ச் 2கே டிஸ்ப்ளேயையும் கொண்டுள்ளது. இது நீடித்துழைப்பில் சமரசம் செய்யாத ஒரு டேப்லெட்டாகும் மேலும் நீங்கள் எதிர்பார்க்கும் அனைத்து வாக்குறுதிகளையும் கொண்டுள்ளது, எனவே உங்கள் சாதனத்தை நீண்ட காலத்திற்கு வைத்திருக்க முடியும்." என்று கூறினார்.

உள்ளேயும் வெளியேயும் நீண்ட ஆயுள் மற்றும் நிலையானது கடினமான அலுமினிய கட்டமைப்பு மற்றும் 60% மறுசுழற்சி செய்யப்பட்ட பிளாஸ்டிக் மற்றும் இரண்டு வருட ஆண்ட்ராய்டு மேம்படுத்தல்களுடன்1 வடிவமைக்கப்பட்டுள்ள நோக்கியா டி21 நீடித்திருக்கும் மேலும் வரும் ஆண்டுகளிலும் உள்ளேயும் வெளியேயும் புதியதாக உணர்கிறது. 2 ஓ எஸ் மேம்படுத்தல்கள் உடன் 3 வருட மாதாந்திர பாதுகாப்பு புதுப்பிப்புகள் கொண்ட ஆண்ட்ராய்டு 12, இதை ஒரு பெரிய மதிப்பு தொகுப்பாக மாற்றுகிறது. ஆயுள் மற்றும் நீண்ட ஆயுள் உள்ளேயும் வெளியேயும்: 4ஜி | எல் டி ஈ சி ஏ டி7 |(எல் டி ஈ மாறுபாடு) குரல், எஸ்எம்எஸ் மற்றும் தரவு ஆதரிக்கப்பட்டது.

நம்பகமான நீண்ட கால பேட்டரி

15 மணிநேர இணைய உலாவல், அதிகப்படியாக பார்க்கும் முழு தொலைக்காட்சித் தொடர் மற்றும் பிரமிக்கவைக்கும் 7 மணிநேர கான்ஃபெரென்ஸ் அழைப்புகள்3 வரை நீங்கள் கடந்து செல்ல இந்த பேட்டரி போதுமான சக்தியைக் கொண்டுள்ளது. பல ஆண்டுகளுக்குப் பிறகும், சராசரியை விட 60% நீண்ட4 பேட்டரி ஆரோக்கியமாக இருப்பதால், அது இன்னும் புதியதாக உணரும். நோக்கியா டி21 க்கு இறுதியில் சார்ஜிங் தேவைப்படும்போது, 18வாட் ஃபாஸ்ட் சார்ஜிங்5 ஆனது, நீங்கள் உடனடியாக செயல்படத் திரும்புவதை உறுதி செய்யும். 800 ரீசார்ஜ்களுக்குப் பிறகும் 80% திறனைத் தக்கவைத்துக் கொள்ளும் நீண்ட கால, நிலையான 8200எம் ஏ எச் பேட்டரியைக் கொண்டுள்ளது.

வீட்டிலும் வேலையிலும் அருமையாக தோற்றமளிக்கிறது.

புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட 2கே டிஸ்ப்ளே, 10.36-இன்ச் 2கே, எஸ் ஜி எஸ் குறைக்கப்பட்ட நீல ஒளி சான்றளிக்கப்பட்ட காட்சியுடன் தெளிவான மற்றும் விரிவான பார்வைக்கு உத்தரவாதம் அளிக்கிறது. நீங்கள் ஆக்கப்பூர்வமாக உணர்ந்தால், செயலில் உள்ள பென்6 ஐப் பயன்படுத்தி யோசனைகளை வரையவும், குறிப்புகளை எழுதவும்அல்லது உங்கள் அடுத்த தலைசிறந்த படைப்பை வரையவும் முடியும். ஒ எசட் ஒ பிளேபேக் ஆடியோ மூலம் உங்கள் சுற்றுப்புறங்களுக்கு ஏற்றவாறு ஆழமான, வலுவான மற்றும் உரத்த ஒலியில் மூழ்குங்கள். உங்களுக்குப் பிடித்த நிகழ்ச்சிகளை நெட்ஃபிலிக்ஸ் முழுவதும் எச் டி ஸ்ட்ரீமிங் மூலம் அனுபவித்து மகிழுங்கள்.

எச் டி வீடியோ மற்றும் குரல் அழைப்புக்கு நன்றி, நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர் உங்கள் இருப்பை முழு மகிமையுடன் அனுபவிக்க முடியும், மேலும் பணி அழைப்புகள் எப்போதும் தொழில்முறை தோற்றத்துடன் இருக்கும். கூடுதலாக, சிறிய அளவு காரணமாக அலுவலகத்திற்கும் வீட்டிற்கும் இடையில் மாறுவது எப்போதும் போல் வசதியானது.

# எ பி எஃப் ஆர் எல் , திருமதி அனன்யா பிர்லா மற்றும் ஆர்யமன் விக்ரம் பிர்லா ஆகியோரை இயக்குநர்களாக நியமித்தது




சென்னை, பிப்ரவரி 06 2023: பிர்லா ஃபேஷன் அண்ட் ரீடெய்ல் -இன் இயக்குனர் குழு இன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில், திருமதி அனன்யா பிர்லா மற்றும் திரு.ஆர்யமான் விக்ரம் பிர்லா ஆகியோரை இயக்குநர்களாக இணைத்துக் கொண்டது. திருமதி அனன்யா பிர்லா மற்றும் திரு. ஆர்யமான் விக்ரம் பிர்லா ஆகியோர் விரிந்திருக்கும் தொழில்முனைவு மற்றும் வணிகக் கட்டமைப்பில் வளமான மற்றும் பல் துறை அனுபவத்துடன் வருகிறார்கள். எ பி எஃப் ஆர் எல் அவர்களின் நவீன உள்நோக்குகள் மற்றும் வணிக அறிவுக்கூர்மையால் எ பி எஃப் ஆர் எல் பயனடையும் என்று இந்த இயக்குநர் குழு நம்புகிறது.

அவர்களின் நியமனம் குறித்து கருத்து தெரிவித்த ஆதித்ய பிர்லா குழுமத்தின் தலைவர் திரு. குமார் மங்கலம் பிர்லா, “ஆதித்யா பிர்லா ஃபேஷன் மற்றும் ரீடெய்ல் இந்திய ஆடை சந்தையின் அனைத்து முக்கிய பிரிவுகளையும் உள்ளடக்கிய பல வகைகளிலும் வடிவங்களிலும் நாகரீக பிராண்டுகளின் வலிமையான போர்ட்ஃபோலியோவை உருவாக்கியுள்ளது. கடந்த சில ஆண்டுகளில், இந்த நிறுவனம் தனது டிஜிட்டல் முயற்சியான டி எம் ஆர் டபிள்யூ மூலம் இந்திய டிசைனர்கள், ஆடம்பர, விளையாட்டு உடைகள் மற்றும் புதிய யுக வணிகங்களுடன் கூட்டாண்மை உட்பட கலாசார உடைகள் போன்ற பல புதிய வளர்ந்து வரும் சந்தைகளில் நுழைந்துள்ளது. இந்த எ பி எஃப் ஆர் எல் தளமானது, இப்போது அதிவேக வளர்ச்சியின் புதிய அலைக்கு தயாராக உள்ளது. அனன்யா மற்றும் ஆர்யமான் ஆகியோரின், அவர்கள் தேர்ந்தெடுத்த துறைகளில் தனிப்பட்ட சாதனைகள் மற்றும் அவர்களின் சுதந்திரமான தொழில் முனைவோர் முயற்சிகளின் ஆரம்ப வெற்றி ஆகியவை பெரிய பொறுப்புகளுக்கு அவர்களை நன்கு அமைத்துக் கொடுத்தன. நவீன வணிக மாதிரிகள் மற்றும் நுகர்வோர் நடத்தையில் வரவிருக்கும் மாற்றங்கள் பற்றிய அவர்களின் ஆழமான அறிவு, எ பி எஃப் ஆர் எல் இயக்குனர் குழுவில் புதிய ஆற்றலை புகுத்தும்" அவர் மேலும் கூறுகையில், “அனன்யா மற்றும் ஆர்யமான் ஆகியோர் குழுவின் மதிப்புகளில் உறுதியாக வேரூன்றியுள்ளனர் மற்றும் குழுவின் நோக்கத்தில் ஆர்வத்துடன் நம்பிக்கை கொண்டுள்ளனர். அவர்கள் குழுவின் வளமான தொழில் முனைவோர் மரபுகள் மற்றும் நிலையான பங்குதாரர் மதிப்பை உருவாக்குவதில் வெற்றிகரமான சாதனைப் பதிவை உருவாக்குவார்கள் என்று நான் நம்புகிறேன்." என்றார்.

திருமதி அனன்யா பிர்லா மற்றும் திரு. ஆர்யமான் விக்ரம் பிர்லா ஆகியோர் சமீபத்தில், ஆதித்ய பிர்லா குழுமத்தின் வணிகங்களுக்கு மூலோபாய வழிகாட்டுதலை வழங்கும் உச்ச அமைப்பான ஆதித்ய பிர்லா மேனேஜ்மென்ட் கார்ப்பரேஷன் பிரைவேட் லிமிடெட் இயக்குநர் குழுவில் இயக்குநர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

திருமதி அனன்யா பிர்லா ஒரு வெற்றிகரமான வணிகப் பெண் மற்றும் பிளாட்டினம் விற்பனை கலைஞர்.17 வயதில் நிறுவப்பட்ட அவரது முதல் நிறுவனமான ஸ்வதந்த்ரா மைக்ரோஃபின் பிரைவேட் லிமிடெட், இந்தியாவின் வேகமாக வளர்ந்து வரும் எம் எஃப் ஐ களில் ஒன்றாகும். இது 1 பில்லியன் அமெரிக்க டாலர் எ யூ எம் ஐ தாண்டியுள்ளது, மேலும் சி எ ஜி ஆர் இல் 120% (2015-2022) வளர்ந்துள்ளது. 7000க்கும் மேற்பட்ட ஊழியர்களுடன், இது தொடர்ந்து வேலை செய்வதற்கான ஒரு சிறந்த இடம் என்ற அங்கீகாரத்தை பெற்றுள்ளது. ஸ்வதந்த்ரா, கிரிசில் எ+ தரத்துடன் இந்த துறையில் இளைய மற்றும் உயர்ந்த தரமதிப்பீடு பெற்ற நிறுவனமாகும். 2018 ஆம் ஆண்டில் மைக்ரோ ஹவுசிங் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தை ஸ்வதந்த்ரா வெற்றிகரமாக கையகப்படுத்தியது. வணிகம் முழுவதும் அவரது கண்டுபிடிப்பு, தொழில்துறையில் பல முதன்மைகளை விளைவித்தது, மேலும் நிதிச் சேவைகளில் ஒரு தொழில்துறை தலைவராக ஸ்வதந்த்ராவின் நிலையை பலப்படுத்தியது. டிசைன் சார்ந்த வீட்டு அலங்காரத்தில் கவனம் செலுத்தும் நிறுவனமான ஐ கே எ ஐ எ எஸ் எ ஐ, திருமதி பிர்லாவால் நிறுவப்பட்டது. சமூக முன்னணியில், திருமதி அனன்யா பிர்லா எம்பவர் நிறுவனத்தை இணைந்து நிறுவியுள்ளார், மேலும் இந்தியாவில் மனநலம் பற்றிய உரையாடல்களின் அவசியத்தை ஆதரிக்கிறார். இவர் மனநலம் மற்றும் சமூக தாக்கத்தில் முன்னோடி ஆராய்ச்சி செய்யும் அனன்யா பிர்லா அறக்கட்டளையின் நிறுவனரும் ஆவார்.

திரு. ஆர்யமன் விக்ரம் பிர்லா, தொழில்முனைவு, வி சி முதலீடு மற்றும் தொழில்முறை விளையாட்டு உள்ளிட்ட பல்வேறு அனுபவங்களுடன் வருகிறார். ஆர்யமான், ஆதித்ய பிர்லா குழுமத்தின் பல வணிகங்களுடன் நெருக்கமாக ஈடுபட்டுள்ளார். குழுமத் தலைவர் திரு. குமார் மங்கலம் பிர்லாவுடன் கலந்தாலோசித்து புதிய யுக நிறுவனங்களில் குழுமத்தின் நுழைவை அவர் தீவிரமாக முன்னெடுத்து வருகிறார். ஆர்யமான், குழுமத்தின் டி2சி இயங்குதளமான டி எம் ஆர் டபிள்யூ ஐ உருவாக்க உதவினார் மற்றும் அதன் இயக்குநர் குழுவில் ஒரு இயக்குநராக உள்ளார். வணிகத்தில் அவரது முதல் தொழில் முனைவு முயற்சி விருந்தோம்பல் துறையில் இருந்தது. ஆர்யமான், குழுமத்தின் வென்ச்சர் கேபிட்டல் நிதியான ஆதித்யா பிர்லா வென்ச்சர்ஸ் நிறுவனத்திற்கும் தலைமை தாங்குகிறார். ஏ பி ஜி யில் சேர்வதற்கு முன்பு ஆர்யமான் ஒரு பிரபலமான முதல்தர கிரிக்கெட் வீரராக இருந்தார்.



**நிதியமைச்சர், ஸ்ரீமதி நிர்மலா சீதாராமன், 2023-2024ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டை சமர்ப்பித்து, ஏழு முன்னுரிமைகள் அல்லது அமிர்த காலின் மூலம் நம்மை வழிநடத்தும் ‘சப்தரிஷி’களை பட்டியலிட்டார். ‘பசுமை வளர்ச்சி‘ பிரிவில், வட்டப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக, கோபர்தன் திட்டத்தின் கீழ், 500 புதிய கழிவு பொருட்களில் இருந்து பயனுள்ள வற்றக மற்றும் ஆலைகள் நிறுவப்படும். இதில் 200 அழுத்தப்பட்ட உயிர்வாயு ஆலைகள் மற்றும் நகர்ப்புறங்களில் 75 அலைகளும், சமூகம் அல்லது கிளஸ்டர் அடிப்படையிலான 300 ஆலைகள், மொத்தம் ரூ 10,000 கோடி முதலீட்டில் அடங்கும்.**

**‘பசுமை வளர்ச்சி’ நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியாக, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம், மில்லியனுக்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட நகரங்களில் கழிவுகளை எரிசக்தி மற்றும் உயிரி-மெத்தனேஷனுக்கான திட்டங்களை மேம்படுத்த இன்ஜினியர்ஸ் இந்தியா லிமிடெட் உடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.**

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# சென்னை விமான நிலைய சுங்கத்துறை 56.94 லட்சம் ரூபாய் மதிப்பிலான 1,110 கிராம் தங்கம் மற்றும் வனவிலங்குகளை பறிமுதல் செய்தது






சென்னை, பிப்ரவரி 06 2023: சென்னை விமான நிலைய சுங்கத்துறை அதிகாரிகள் தங்களுக்கு கிடைத்த ரகசிய தகவல்களின் அடிப்படையில் ஃபிளை துபாய் ஏர்லைன்ஸ் விமானம் மூலம் துபாயிலிருந்து இன்று சென்னை வந்த ஒரு ஆண் பயணியிடம் சோதனை மேற்கொண்டனர். அப்போது, 56.94 லட்சம் ரூபாய் மதிப்புடைய பசை வடிவிலான 1,110 கிராம் தங்கத்தை மறைத்து வைத்திருந்ததைக் கண்டறிந்து பறிமுதல் செய்து அவரை கைது செய்தனர்.

மற்றொரு சம்பவத்தில் பேங்காங்கிலிருந்து இன்று வந்த இந்தியப் பயணியை சென்னை விமான நிலைய சுங்கத்துறை அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர். அப்போது, அப்பயணி பையில் மறைத்து வைத்திருந்த 2 அரியவகை குரங்குகளை பறிமுதல் செய்தனர். பின்னர் அப்பயணி கைது செய்யப்பட்டு ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். ள்ள

இத்தகவலை சென்னை சர்வதேச விமான நிலைய சுங்கத்துறையின் முதன்மை ஆணையர் திரு மேத்யு ஜாலி தெரிவித்தார்.

# ஆக்சிஸ் மியூச்சுவல் ஃபண்ட், 'ஆக்சிஸ் பிசினஸ் சைக்கிள்ஸ் ஃபண்ட்' ஐ அறிமுகப்படுத்துகிறது

சென்னை, பிப்ரவரி 06 2023: இந்தியாவில் வேகமாக வளர்ந்து வரும் ஃபண்ட் ஹவுஸ்களில் ஒன்றான ஆக்சிஸ் மியூச்சுவல் ஃபண்ட், வணிக சுழற்சிகள் அடிப்படையிலான முதலீட்டு கருப்பொருளைத் பின்பற்றும் ஒரு திறந்தநிலை ஈக்விட்டி திட்டமான, தங்களின் புதிய ஃபண்ட் வழங்கலான, ஆக்சிஸ் பிசினஸ் சைக்கிள்ஸ் ஃபண்ட் ஐ அறிமுகப்படுத்துவதாக அறிவித்தது. இந்த புதிய ஃபண்ட் வழங்கல் பிப்ரவரி 2, 2023 அன்று திறக்கப்பட்டு பிப்ரவரி 16, 2023 அன்று முடிவடைகிறது. இந்த திட்டம் திரு. ஆஷிஷ் நாயக் ஆல் நிர்வகிக்கப்படும். இந்த புதிய நிதி நிஃப்டி 500 டி ஆர் ஐ - ஐ கண்காணிக்கும் மற்றும் குறைந்தபட்ச முதலீட்டுத் தொகை ரூ. 5000 மற்றும் அதன் பிறகு ரூ. 1/- இன் மடங்குகளில் இருக்கும்.

வணிக சுழற்சியின் முதலீட்டு அறிவு

ஒரு சுழற்சி என்பது தேவை மற்றும் விநியோகத்தின் செயல்பாடாகும்., எப்பொழுதெல்லாம் சப்ளை அதிகமாக இருக்கிறதோ, அப்போதெல்லாம் விலை குறையும் தேவை அதிகமாகும்போது விலைகள் உயரும் என்று, அடிப்படை வணிகப் பொருளாதாரம் நமக்குக் கற்பிக்கிறது இத்தகைய இயக்கம் ஒரு சுழற்சியை உருவாக்குகிறது, மேலும் சிறிய வணிகங்கள் முதல் பெரிய வணிகங்கள் வரை இதை காணலாம். வணிகச் சுழற்சியின் நான்கு முதன்மைக் கட்டங்கள் விரிவாக்கம், உச்சம், மந்தநிலை மற்றும் பள்ளம் என்று நாங்கள் நம்புகிறோம். ஒவ்வொரு பொருளாதாரம், மற்றும் விரிவாக்கம் மூலம், வணிகம் இந்த கட்டங்களை கடந்து செல்கிறது. ஒரு கட்டம் எவ்வளவு காலம் நீடிக்கும், அல்லது அடுத்த கட்டத்திற்கு அது எப்போது நகரும் என்பது நிச்சயமற்றது.

எனவே, ஒருவர் சுழற்சிகளை சரியாக அடையாளம் காண முடிந்தால், அங்கே ஒரு முதலீட்டு வாய்ப்பு உள்ளது. ஒரு வணிக சுழற்சியை அடையாளம் காண்பது என்பது பல குறிகாட்டிகளை அடையாளம் காணும் ஒரு கலையாகும், பின்னர் ஒரு ஒத்திசைவான முதலீட்டு கருத்தை உருவாக்குகிறது. இதற்கு ஏராளமான தரவு புள்ளிகள் மற்றும் குறிகாட்டிகள் அங்கே உள்ளன. மக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் தொடர்பு கொள்வதும், பொருளாதாரத்தின் ஆரோக்கியம் மற்றும் அடிப்படை முதலீட்டு ஆய்வறிக்கை இரண்டையும் சிறப்பாகக் குறிக்கும் குறிகாட்டிகளை பயன்படுத்துவதே எங்கள் வேலை.

இப்போது ஏன் ஒரு வணிக சுழற்சி நிதி?

உள்நாட்டுப் பொருளாதாரம் இப்போது ஒரு சுவாரஸ்யமான கட்டத்தில் உள்ளது. தொற்றுநோய்க்கு முந்தைய என் பி எஃப் சி நெருக்கடிக்கு மத்தியில் கோவிட் 19 தொற்றுநோயின் ஆரம்பம் விஷயங்களை மிகவும் சவாலாக மாற்றியது. எவ்வாறாயினும், புதிய கேபெக்ஸ் சுழற்சியின் உச்சத்தில் நாம் நிற்பதால், கோவிட்-க்கு பிந்தைய கட்டத்தில் விஷயங்கள் மேம்படத் தொடங்கியுள்ளன. பெரிய நிறுவனங்களில் இருப்புநிலைகள் வலுப்பெற்றுள்ளன, உள்நாட்டு தேவை வலுவாக உள்ளது, திறன் கூட்டலை அதிகரிக்கக்கூடிய பி எல் ஐ திட்டங்களில் அதிகரிக்கப்பட்ட கவனம் இருக்கிறது, மேலும் பரந்த டிஜிட்டல்மயமாக்கல் பொருளாதாரத்திற்கு வலுவான உத்வேகத்தை அளிக்கிறது.

இது நாம் விரிவாக்கத்தின் ஆரம்ப கட்டத்தில் இருப்பதைக் குறிக்கலாம். கடந்த தசாப்தத்தில் பொருளாதார வளர்ச்சிக்கு, நுகர்வு முதன்மையான உந்துதலாக இருந்திருந்தால், இந்த தசாப்தத்தில் கேபெக்ஸ் மற்றும் உற்பத்தி மூலம் முதலீடு செய்வதும் வளர்ச்சி உந்துதலாக இருக்கலாம். இத்தகைய வளர்ச்சி சூழலில், நுகர்வு சார்ந்த வணிகங்களான பி2சி மற்றும் அதிக சுழற்சியான பி2பி துறைகள் இரண்டும் சிறப்பாகச் செயல்பட முடியும்.

எனவே, ஆக்ஸிஸ் வணிக சுழற்சிகள் நிதி எவ்வாறு செயல்படும்?

இந்த நிதியானது சுழற்சியால் இயக்கப்படும் போர்ட்ஃபோலியோவைக் கொண்டிருக்கும். விரிவாக்க காலங்களில், வரவிருக்கும் சாதகமான சுழற்சியில் இருந்து பயனடையும் நிறுவனங்களின் சுழற்சி சார்ந்த துறை சார்ந்த போர்ட்ஃபோலியோவை உருவாக்குவதில் கவனம் செலுத்துவோம். மந்தநிலைகள் அல்லது நிச்சயமற்ற நேரங்களில், கடினமான காலங்களில் செல்ல சிறந்த நிலையில் இருக்கும் சுழற்சி தீம்கள் அல்லது நிறுவனங்களை எதிர்கொள்ள போர்ட்ஃபோலியோ சாய்ந்துவிடும்.

முதலீட்டுக்கான கீழிருந்து மேல் அணுகுமுறைக்கு மாறாக, இந்த நிதி, முதலீடு செய்வதற்கு ஒரு கலப்பின அணுகுமுறையைப் பயன்படுத்தும். பொருளாதாரப் போக்குகளைக் கண்டறிவதற்கான டாப்-டவுன் அணுகுமுறை மற்றும் {அதிக முக்கியமாகத் தங்களின் வணிக மேல் சுழற்சியிலிருந்து பயனடைவதற்கு மிகவும் பொருத்தமான துறைகளைத் தேர்ந்தெடுக்கவும்} பின்னர், அடையாளம் காணப்பட்ட துறையில் மற்றவற்றிற்கு மேல் செழித்து வளரும் குறிப்பிட்ட பங்குகளை அடையாளம் காண கீழிருந்து மேல் அணுகுமுறையைப் பயன்படுத்தும். மேலும், இந்த ஃபண்ட் சந்தை சார்பு இல்லாமல் நெகிழ்வான அணுகுமுறையைப் பின்பற்றும்.

இது அதிக எடை மற்றும் குறைந்த எடையின் அடிப்படையில் அதிக தீவிரமாக இருக்கும் நெகிழ்வுத்தன்மையைக் கொண்டிருக்கும். ஒரு துறையில் ஒரு வாய்ப்பை நாம் பார்க்கும்போது, அந்தத் துறையில் நமது உயர்ந்த நம்பிக்கையை வெளிப்படுத்தி ஒரு பெரிய நிலையை உருவாக்க நாம் முயற்சிப்போம். முதலீட்டுக் கதை முடிந்ததும் நமது எடைகளைக் குறைக்க முயற்சிப்பதும், உடனடி சாதகமான முன்னேற்றத்துடன் அடுத்தத் துறைக்குச் செல்வதும் சமமாக முக்கியமானதாக இருக்கும்.

என் எஃப் ஓ அறிமுகம் குறித்து, ஆக்சிஸ் ஏ எம் சி இன் எம் டி & சி ஈ ஓ, திரு. சந்திரேஷ் நிகம், " " இந்தியாவின் வளர்ச்சியை 'பிசினஸ் சைக்கிள்' பூதக்கண்ணாடி மூலம் ஒருவர் ஆய்வு செய்தால், நாங்கள் தற்போது விரிவாக்கம் மற்றும் உச்ச கட்டத்திற்கு இடையே ஒரு சுவாரஸ்யமான இடத்தில் இருக்கிறோம். இந்தியாவில் முதலீட்டு சுழற்சியை அதிகரிப்பதற்கு, பல இயக்கிகள் சரியான இடத்தில் அமைவதற்கு தொடங்கியுள்ளன. ஆக்சிஸ் பிசினஸ் சைக்கிள்ஸ் (மேலிருந்து கீழ் மற்றும் கீழிருந்து மேல் ஆகியவற்றின் கலவை) பயன்படுத்தும் தனித்துவமான கலப்பின முதலீட்டு அணுகுமுறையானது, முதலீட்டின் தரமான பாணியை கடைபிடிக்கிறது மற்றும் முதலீட்டாளர்களுக்கு சந்தை காப் சார்புகளை வழங்காது. சந்தை வாய்ப்புகளை ஒழுக்கமான முறையில் பயன்படுத்துவதை நம்பும் ஃபண்ட் ஹவுஸ் என்ற முறையில், முதலீட்டாளர்களின் போர்ட்ஃபோலியோவில் ஆக்சிஸ் பிசினஸ் சைக்கிள்ஸ் ஃபண்ட் ஒரு குறிப்பிடத்தக்க சேர்க்கையாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்." என்று கூறினார்.

# சென்னை ஷிவ் நாடார் பல்கலைக்கழகம் 2023 அமர்வு நுழைவுத் தேர்வுக்கான தேதிகளை அறிவித்துள்ளது

சென்னை, பிப்ரவரி 06 2023: ஷிவ் நாடார் ஃபவுண்டேஷனின் ஒரு பகுதியான மற்றும் இந்தியாவின் முதன்மையான கல்வி நிறுவனங்களில் ஒன்றான ஷிவ் நாடார் பல்கலைக்கழகம் சென்னை 2023 அமர்வுக்கான நுழைவுத் தேர்வுகளை அறிவித்துள்ளது. சென்னை, டெல்லி, மும்பை, கோவை, மதுரை, பெங்களூர், ஐதராபாத், விஜயவாடா, திருவனந்தபுரம் மற்றும் கொல்கத்தா ஆகிய 10 நகரங்களில் நுழைவுத் தேர்வுகள் நடைபெற உள்ளன. இந்த தேர்வுகள் ஏப்ரல் 8 முதல் ஜூன் 17, 2023 வரை பல கட்டங்களாக நடைபெறும். இது வருங்கால மாணவர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தவும், புகழ்பெற்ற பல்கலைக்கழகத்தில் தங்கள் எதிர்காலத்தை பாதுகாக்கவும் ஏராளமான வாய்ப்புகளை வழங்குகிறது. வருங்கால மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 நகரங்களில் ஏதேனும் ஒன்றில் நுழைவுத் தேர்வுகளை எழுதுவதற்கான வாய்ப்பை பெறுவார்கள். அவர்கள் ஆரம்பத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட நகரம் அல்லது தேர்வு தேதியுடன் முரண்பாடு ஏற்பட்டால், மறு அட்டவணை செய்வதற்கான வாய்ப்பை வழங்குகிறது. ஆனாலும், எந்தவொரு குறிப்பிட்ட பாடத்திட்டத்திற்கும் ஒரு விண்ணப்பதாரர் ஒருமுறை மட்டுமே தேர்வில் பங்கேற்க முடியும். பிப்ரவரி 6 முதல் மார்ச் 31, 2023 வரை லீமீமீஜீவ://ஷ்ஷ்ஷ்.வுஸீ ஷுநீலீமீஸீஸீணீவீ.மீபீ ஷு.வீஸீ/> இல் பதிவு செய்வதற்கான படிவம் கிடைக்கும்.

இந்த அறிவிப்பு பற்றி தனது எண்ணங்களை பகிர்ந்து கொண்ட, சென்னை ஷிவ் நாடார் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் ஸ்ரீமன் குமார் பட்டாச்சார்யா கூறுகையில், "தொலைநோக்கு நம்பிக்கையே நாளைய பாதையை அமைக்கிறது. எனவே, திறன்களை முழுமையாக கொண்ட தொலைநோக்குடைய மற்றும் செயல் ஊக்கமுள்ள நபர்கள் புதிய யுகத்தின் ஆற்றல்மிக்க ஜாப் மார்க்கெட்டில் நல்ல வளர்ச்சி பெறுவார்கள். சென்னை ஷிவ் நாடார் பல்கலைக்கழகத்தில், புதிய யுகத்தில் வெற்றிபெற தேவையான திறன்கள் மற்றும் அறிவுடன் எங்கள் மாணவர்களை ஆயத்தப்படுத்தும் புதுமையான பொறியியல், மேலாண்மை மற்றும் மனிதநேய திட்டங்களை வழங்குவதில் பெருமிதம் கொள்கிறோம். 2023 ஆம் ஆண்டுக்கான நுழைவுத்தேர்வு தேதிகள் அறிவிக்கப்பட்டுள்ளதால், திறமையான மற்றும் ஊக்கமளிக்கும் நபர்களின் புதிய குழுவை வரவேற்க நாங்கள் ஆர்வமாக உள்ளோம்."

இந்த பல்கலைக்கழகம் பொறியியல், வணிகம் மற்றும் மனிதநேயம் ஆகிய துறைகளில் ஆறு சிறப்பு இளங்கலை பாடத்திட்டங்களை வழங்குகிறது. இந்த சமகால திட்டங்கள் தொழில் சார்ந்த, அறிவு மற்றும் திறன்களை வளர்க்கும், இது இந்தியாவிலும் வெளிநாட்டிலும் வளரும் தொழில் அல்லது கல்வி தளத்தில் மாணவர்கள் நுழையவும் சிறந்து விளங்கவும் உதவும்.

தற்போது, பல்கலைக்கழகத்தில் 815 மாணவர்கள் மற்றும் 55 ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள் உள்ளனர். ஸ்கூல் ஆஃப் இன்ஜினியரிங் பாடத்திட்டங்களில் கிடைக்கும் இடங்களின் எண்ணிக்கை:

● H. ª டக் கம்ப்யூட்டர் சயின்ஸ் மற்றும் என்ஜினீயரிங் (இன்டர்நெட் ஆஃப் திங்ஸ்): 120

பி. டெக் ஆர்ட்டிஃபிசியல் இன்டெலிஜென்ஸ் மற்றும் டேட்டா அறிவியல்: 120

பி. டெக் கம்ப்யூட்டர் சயின்ஸ் மற்றும் என்ஜினீயரிங் (சைபர் பாதுகாப்பு): 60

ஸ்கூல் ஆஃப் காமர்ஸ் அன்ட் மேனேஜ்மென்ட் பாடத்திட்டங்களில் கிடைக்கும் இடங்களின் எண்ணிக்கை:

பி. காம் (புரஃபஷனல் அக்கவுண்டிங்): 60

பி. காம்/பி. காம் (ஹானர்ஸ்): 60

ஸ்கூல் ஆஃப் சயின்ஸ் & ஹ்யூமானிட்டிஸ் பாடத்திட்டங்களில் கிடைக்கும் இடங்களின் எண்ணிக்கை:

பி. எஸ் சி. பொருளாதாரம் (டேட்டா அறிவியல்) : 60

ஷிவ் நாடார் பல்கலைக்கழகம் சென்னை சேர்க்கை செயல்முறையை அணுகக்கூடிய மற்றும் ஆர்வமுள்ள அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் இடமளிக்க முயற்சிக்கிறது. இப்பல்கலைக்கழகம் 90 ஆண்டுகளுக்கு பிறகு (1928 இல் அண்ணாமலை பல்கலைக்கழக சட்டம் இயற்றப்பட்டதில் இருந்து) ஷிவ் நாடார் பல்கலைக்கழக சட்டம் 2018 இயற்றப்பட்டதன் மூலம் தமிழ்நாட்டில் சட்டமியற்றப்பட்ட முதல் தனியார் மாநில பல்கலைக்கழகம் ஆகும். மாணவர்கள் ஆறு சிறப்பு பாடத்திட்டங்களில் இளங்கலை பட்டப்படிப்புகளை பெறுவார்கள். இந்தியாவிலும் வெளிநாட்டிலும் வளர்ந்து வரும் கல்வி மற்றும் தொழில்முறை தேவைகளுக்கு ஏற்ப இந்த திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

# இன்ஃபோசிஸ் அறக்கட்டளை ஆரோஹன் சமூகப் புத்தாக்க விருதுகளின் மூன்றாவது பதிப்பை அறிவித்துள்ளது

சென்னை, பிப்ரவரி 06 2023: இந்தியாவில் சமூகப்புத்தாக்கங்களை துரிதப்படுத்தவும் அவற்றுக்கு வெகுமதி அளிக்கவும் ரூ. 2 கோடியை ஒதுக்கியுள்ளது

ஆரோஹன் சமூகப் புத்தாக்க விருதுகளின் மூன்றாவது பதிப்பை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தியாவில் மேலும் சமூகப் புத்தாக்கங்களை உருவாக்க, இன்ஃபோசிஸ் அறக்கட்டளை நாடு முழுவதும் உள்ள கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் சமூக தொழில்முனைவோர்களை இந்த விருதுகளில் பங்கேற்க அழைக்கிறது.

ஆரோஹன் சமூகப் புத்தாக்க விருதுகள் 2023, இந்தியா முழுவதும் உள்ள குறைவான வசதிகளைப் பெற்றோர் மத்தியில் குறிப்பிடத்தக்க வேறுபாட்டைக் கொண்டு வரக்கூடிய தனித்துவமான தொழில்நுட்ப அடிப்படையிலான தீர்வுகளை உருவாக்கும் தனிநபர்கள், குழுக்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களை ஊக்குவித்து வெகுமதி அளிக்கிறது. இன்ஃபோசிஸ் அறக்கட்டளை ஒரு வெற்றியாளருக்கு ரூ. 50 லட்சம் வரை வழங்கும், மொத்த விருது மதிப்பு ரூ. 2 கோடியாகும்.

"இன்ஃபோசிஸ் அறக்கட்டளையில், சமூக நலனுக்காக இடைவிடாமல் உழைக்கும் சக்தியை நாங்கள் எப்போதும் நம்புகிறோம். ஆரோஹன் சமூகப் புத்தாக்க விருதுகள் சமூக நலனில் தாக்கத்தை ஏற்படுத்தும் திறன் கொண்ட சிறந்த கண்டுபிடிப்புகள் மதிப்பிடப்பட்டு, ஊக்குவிக்கப்பட்டு, வெகுமதி அளிக்கப்படும் ஒரு தளத்தின் மூலம் வளர்ப்பது எங்கள் நோக்கமாகும். விருதுகளின் கடந்த பதிப்புகள் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுள்ளன, இது மிகப்பெரிய தாக்கத்தை உருவாக்கியது. 2023 பதிப்பின் மூலம், நாடு முழுவதும் உள்ள சமூக கண்டுபிடிப்பாளர்களை ஊக்குவிப்பதன் மூலம் இந்த வேகத்தை முன்னோக்கி கொண்டு செல்வோம் என்று நம்புகிறோம், அவர்களின் யோசனைகள் மற்றும் ஆர்வத்தை, உண்மையான மாற்றத்தை, அளவில் கொண்டு வருவதற்கான சாத்தியக்கூறுகளுடன், தாக்கத்தை ஏற்படுத்தும் விருது வென்ற தீர்வுகளாக மாற்றலாம்" என்று கூறினார், இன்ஃபோசிஸ் அறக்கட்டளையின் அறங்காவலர் சுமீத் விர்மானி அவர்கள்.

ஆரோஹன் சமூகப் புத்தாக்க விருதுகள் 2023 மூன்று பிரிவுகளில் சமர்ப்பிப்புகளை ஏற்கும்:

கல்வி சுகாதாரம் பெண்கள் திறனளிப்பு முக்கிய சிறப்பம்சங்கள்:

ஆரோஹன் சமூகப் புத்தாக்க விருதுகளின் மூன்றாவது பதிப்பிற்கான சமர்ப்பிப்புகள் மார்ச் 12, 2023 அன்று முடிவடையும்

இந்தியாவில் வசிக்கும் 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட அனைத்து இந்திய குடிமக்களுக்கும் இதில் சமர்ப்பிக்கலாம்.

பங்கேற்பாளர்கள் ஆரோஹன் சமூகப் புத்தாக்க விருதுகள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யக்கூடிய வீடியோ வடிவில் தங்கள் வேலையை விவரிக்கும் உள்ளீடுகளைச் சமர்ப்பிக்கலாம்.

உள்ளீடுகள் முழுமையாக செயல்படும் முன்மாதிரியாகவோ அல்லது முடிக்கப்பட்ட திட்டமாக இருக்க வேண்டும் மற்றும் வெறும் கருத்து, யோசனை அல்லது வெற்று மாடலாக இருக்கக்கூடாது. கூடுதலாக, கண்டுபிடிப்பு ஒரு தனிநபர், ஒரு குழு, ஒரு இலாப நோக்கற்ற அல்லது ஒரு சமூக நிறுவனமாகவும் இருக்கலாம்.

பிரபல நடுவர்கள் குழு இறுதி வெற்றியாளர்களைக் கண்டறியும் வகையில் பட்டியலிடப்பட்ட பங்கேற்பாளர்களை மதிப்பீடு செய்வர். இறுதி வெற்றியாளர்கள் பின்வரும் அளவுகோல்களின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுவார்கள்: ஒரு சமூக பிரச்சனை அல்லது தேவைக்காகப் பயன்படுவதோடு அளவிடக்கூடிய சாத்தியக்கூறுகள் நிலைத்தன்மையை மையமாகக் கொண்ட, தொழில்நுட்பத்தின் புத்தாக்கப் பயன்பாடு யோசனைகளின் அசல்தன்மை சுலபமான பயன்பாடு விளக்கக்காட்சியின் தரம்.

# என் ஈ சி கார்பரேஷன் இந்தியா மற்றும் இன்டெல்டி டெக்னாலஜி இந்தியா நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் எ வி ஐ டி, வி எம் ஆர் எஃப் (டியூ) கல்வி நிறுவனங்கள்




சென்னை, பிப்ரவரி 06 2023: அறுபடை வீடு இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி ( நிகர் நிலை பல்கலைக்கழகமான விநாயகா மிஷன் ஆராய்ச்சி அறக்கட்டளையின் ஒரு கல்வி நிறுவனம்), என் ஈ சி கார்பரேஷனின் ஒரு துணை நிறுவனமான என் ஈ சி கார்பரேஷன் இந்தியா மற்றும் இன்டெல்டி டெக்னாலஜி இந்தியா பிரைவேட் லிமிடெட் ஆகியவற்றுடன் ஒரு ஒத்துழைப்பு உடன்பாடு மேற்கொள்ளப்பட்டிருப்பதை அறிவித்திருக்கிறது. தொழில்நுட்ப கல்வி கற்கவிருக்கும் மாணவர்களுக்கு ஒரு விரிவான கல்வி செயல்திட்டத்தை வழங்குவதே இதன் நோக்கம். ஒரு பிரத்யேக ஏஐ/எம் எல், எச் பி சி ஆய்வகம் மற்றும் இன்டெல்டி உன்னாட்டி தரவை மையமாகக் கொண்ட ஆய்வகத்தை நிறுவுவதன் மூலம் பல்வேறு தொழில்பிரிவுகளில் தங்களது முழு சாத்தியத்திறனை மாணவர்களும், ஆராய்ச்சியாளர்களும் எட்டுவதற்கு உதவுகிற ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் , எ வி ஐ டி மற்றும் என் ஈ சி கார்பரேஷன் இந்தியா மற்றும் இன்டெல்டி ஆகியவை கையெழுத்திட்டிருக்கின்றன. எடுலேட்ரல் ஃபவுண்டேஷனின் வழியாக இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியிருக்கிறது . இன்டெல்டி மற்றும் என் ஈ சி கார்பரேஷன் உடனான இந்த முக்கிய கூட்டாண்மை செயல்பாடு இந்தியாவில் இவ்வகையினத்தில் முதன்முறையாக மேற்கொள்ளப்படுகிறது. இன்டெல்டி - என் ஈ சி கூட்டாக வழங்கும் சான்றிதழ்களுடனும், உத்தரவாதமுள்ள இன்டர்ன்ஷிப் மற்றும் பணியமைவிட அமர்வு ஆகிய வசதிகளுடன் பொறியியல் & தொழில்நுட்பம் மற்றும் கலை மற்றும் அறிவியல் செயல்திட்டத்தில் விரிவான கல்விசார் செயல்திட்டங்களை இது வழங்குகிறது.

வி எம் ஆர் எஃப் (டியூ)-ன் துணை வேந்தர், டாக்டர். பி.கே. சுதிர் இந்நிகழ்வின்போது கூறியதாவது: “கலவையான கல்விசார் கட்டமைப்புகளை உருவாக்குவதே எதிர்காலத்தில் பிரபலமாக இருக்கும், வன்பொருள் மற்றும் மென்பொருள் பயன்பாடுகளிலும் உருவாகிவரும் தொழில்நுட்ப புத்தாக்கத்தில் உலகத்தரத்தில் எமது மாணவர்களுக்கு என் ஈ சி இந்தியா மற்றும் இன்டெல்டி ஆகிய நிறுவனங்களோடு சேர்ந்து பயிற்சியளிப்பதில் நாங்கள் நம்பிக்கைக் கொண்டிருக்கிறோம். இந்த பட்டப்படிப்பு செயல்திட்டம் முழுவதிலும் நிஜ உலகில் பிரச்சனைகளை தீர்க்கும் தீர்வுகளுக்கு பயிற்சியளிப்பதுடன், குறித்த காலஅளவுகளில் திறன்களுக்கான சான்றிதழ்களை வழங்கி இச்செயல்திட்டத்தை நாங்கள் மேற்கொள்ளவிருக்கிறோம். எதிர்காலத்தில் தொடர்ந்து மாற்றம் காணக்கூடிய பணியமைவிடத்தில் திறம்பட செயல்பட அறிவு மற்றும் திறன்கள் கொண்ட சிறப்பான தொழில்நுட்ப பணியாளர்களாக உருவெடுக்க எமது மாணவர்களை இது உருவாக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.”

# தேசிய தொடக்க தினத்தை நினைவுகூரும் வகையில், கிராம்ப்ரூனர்டிக்காக மட்டுமே ஒரு தனித்துவமான மற்றும் இலவச தொழில்முனைவோர் பயன்பாடு தொடங்கப்பட்டது

சென்னை, பிப்ரவரி 06 2023: 2023 ஆம் ஆண்டின் தேசிய தொடக்க தினத்தை நினைவுகூரும் வகையில், இந்தியாவின் முன்னணி இலாப நோக்கற்ற பாரதிய யுவ சக்தி அறக்கட்டளையால் ஒரு தனித்துவமான செயலி அறிமுகப்படுத்தப்பட்டது. ஒரு ஆண்ட்ராய்டு-ஐஓஎஸ் மொபைல் பயன்பாடாக, இந்தியா முழுவதிலும் உள்ள அடித்தட்டு தொழில்முனைவோரை ஒரே தளத்தில் ஒன்றிணைப்பதை இந்த தளம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த தளத்தில், வழிகாட்டப்பட்ட மற்றும் கடன் பெற்ற தொழில்முனைவோர் மற்றும் ஆலோசனை பெற்றவர்கள் மட்டும் ஒரு பகுதியாக இருப்பார்கள். நாடு முழுவதும் உள்ள ஆர்வமுள்ள மற்றும் வருங்கால தொழில்முனைவோர்களின் பிந்தைய குழுவைச் சேர்ப்பதன் மூலம் அவர்களின் தொழில்முனைவோர் இலக்குகளைத் தொடர்வதற்கும் வளர்ப்பதற்கும் உதவும் இந்த சுற்றுச்சூழல் அமைப்பில் இந்த பொருளாதாரத்தில் பின்தங்கிய இளைஞர்களை பங்கேற்க செய்வது இந்த செயலியின் சிறப்பு அம்சமாகும். மொழி, புவியிடங்கள், மக்கள்தொகை மற்றும் டிஜிட்டல் முதிர்ச்சி போன்றவற்றில் கிராமப்புற தொழில்முனைவோரின் தேவைகள் மற்றும் பன்முகத்தன்மை ஆகியவற்றை மனதில் கொண்டு இந்த பயன்பாடு மிகவும் கவனமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. பல்வேறு வடிவங்கள் மூலம், நாட்டின் இளைஞர்களுக்கு, காலத்தின் தேவையான கற்றல் ஆனது, இந்த தளத்தின் ஒருங்கிணைந்த முக்கியமான ஒன்றாக இருக்கிறது. டிஜிட்டல் மார்க்கெட்டிங், வணிக மேம்பாடு, நிதி, மனித வளம், மென் திறன்கள், விற்பனை மற்றும் செயல்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படைகளுக்கு கூடுதலாக, வணிகங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் சுற்றுச்சூழல், சமூக மற்றும் நிர்வாக ஒழுங்குமுறைகள் மற்றும் சூழல் நட்பு செயல்முறைகள் மற்றும் நடைமுறைகளை அவர்கள் எவ்வாறு பின்பற்றலாம் என்பதைப் பற்றி அவர்களுக்குக் கற்பிப்பதில் சிறப்பு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. பி ஒய் எஸ் டி தொழில்முனைவோர் ஆண்ட்ராய்டு-ஐஓஎஸ் மொபைல் பயன்பாட்டை (செயலி ) பிற இணை குழு உறுப்பினர்களுடன் இணைந்து தொடங்கும் போது, □□ என் சி டி டெல்லி அரசின் முதன்மைச் செயலாளர், திரு. ஆஷிஷ் குந்த்ரா, கூறும்போது, □□“இது சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட முயற்சி, இது மில்லியன் கணக்கான அடிமட்ட தொழில்முனைவோரை ஒரே தளத்தில் கொண்டுவந்து , அவர்களுக்கு இணைய உதவி , வணிக அறிவைப் பகிர்ந்து கொள்ளவும், டிஜிட்டல் நிகழ்வுகளில் கலந்து கொள்ளவும், நாடு முழுவதும் உள்ள தொழில் வழிகாட்டிகளின் தொகுப்பை அணுகவும் உதவும்."என்று கூறினார். "

இந்த செயலியானது, சுயதொழில் மற்றும் வங்கிச் சேவைகளை அணுகுவதற்கு பொருளாதாரத்தில் பின்தங்கிய சமூகங்களைச் சேர்ந்த இளைஞர்களை உள்வாங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதை மிகவும் தனித்துவமான மற்றும் சிந்தனைமிக்க அம்சமாக நான் கருதுகிறேன்," என்று திரு. குந்த்ரா மேலும் கூறினார். பிரிட்டிஷ் ஹை கமிஷன் புது தில்லி, தெற்காசியாவிற்கான துணை வர்த்தக ஆணையர், திருமதி அன்னா ஷாட்போல்ட், யுகே-இந்தியா வழிகாட்டுதல்கள் 2030 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, நிறுவன மேம்பாட்டில் இந்திய அரசுக்கும் இங்கிலாந்துக்கும் இடையிலான வலுவான கூட்டாண்மையை எடுத்துரைத்தார். ஊக்கமளிக்கும் தொழில்முனைவோர் வெற்றிகளை அவர் வரவேற்றார். மற்றும் பி ஒய் எஸ் டி திட்டங்களின் கீழ் அடையப்பட்ட விளைவுகளுக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்தார். பி ஒய் எஸ் டி பிசினஸ் ஐடியா போட்டியின் வெற்றியாளர்களான புவனேஸ்வரைச் சேர்ந்த திருமதி சாந்தினி கண்டேல்வால் (ஒடிசா மாநிலம் ) மற்றும் ராஞ்சியிலிருந்து (ஜார்கண்ட் மாநிலம்) திரு விக்ரம் குமார் ஆகியோருக்கு புது தில்லி பிரிட்டிஷ் ஹை கமிஷன் இன் இன்வெஸ்ட்மென்ட் லீட் திரு. சுமேஷ் கிர்ஹோத்ரா விருது வழங்கினார். "சமீபத்திய ஆண்டுகளில், இந்திய தொடக்க நிறுவனங்கள் உலகளாவிய கவனத்தை ஈர்த்துள்ளன, துணிகர மூலதனத்தைப் பெற்றன, மேலும் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றுள்ளன. இத்தகைய முன்முயற்சி, குறைந்த சலுகை பின்னணியில் உள்ள அடிமட்ட தொழில்முனைவோருக்கு உயரளவில் இயக்கப்பட்டால் , நாட்டின் பொருளாதாரத்தில் பல மடங்கு தாக்கத்தை ஏற்படுத்தும் மேலும் ஆத்மநிர்பர்தா/தற்சார்பு என்ற அதன் இலக்கை அடைய உதவும். நிகூஷீணீனீஜீகூஷீமீஸீமீஞூகூஷீ உடிகளை, வேலை தேடுபவர்களாக அல்ல, வேலை உருவாக்குபவர்களாக மாற்றுவதுதான் எங்களின் ஒரே குறிக்கோள் ஆகும் . ”என்று பி ஒய் எஸ் டி இன் நிறுவனர் மற்றும் நிர்வாக அறங்காவலர், லக்ஷ்மி வெங்கடராமன் வெங்கடேசன், ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார். தொழில் முனைவோர் திறன்களை மேம்படுத்துவதற்கும், தொடக்கநிலை தொழில்முனைவோருக்கு சரியான தொழில்நுட்ப மற்றும் நிதி அறிவை வழங்குவதற்கும், சிட்டி மற்றும் சிஸ்கோ போன்ற முக்கிய பொது மற்றும் தனியார் பங்குதாரர்களுடன் பி ஒய் எஸ் டி புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டது. சிட்டி இன் சி எம் டி சிவசுப்ரமணியன்ராமன் கூறுகையில், "நாட்டில் சூழல் நட்பு வணிகப் புரட்சியைக் கட்டவிழ்த்துவிட, குறுந்தொழில் முனைவோர்களை டிஜிட்டல் முறையில் தயார்படுத்தி இஎஸ்ஜி நல்ல நடைமுறைகளைச் செயல்படுத்துவதற்கு ஆதரவளிப்பதற்கும் அவர்களுக்கு வழிகாட்டுவதற்கும் சிட்டி மற்றும் பி ஒய் எஸ் டி ஆகியவை புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்."என்று கூறினார்.

# உயிர் என்பது ரத்தம் சதை மட்டும் அல்ல; உணர்வுகள், நினைவுகளும் தான் வாழ்க்கையின் ஆதார சக்தி என்பதை, அப்பா - மகன் கதாபாத்திரங்கள் வழியாக உணர்த்தியுள்ள படம் தலைக்கூத்தல்



சென்னை, பிப்ரவரி 06 2023: கோமா நிலையில் படுக்கையில் இருக்கும் தன் தந்தை முத்து (கலைச் செல்வன்), ஒரு நாள் கண் விழிப்பார் என்ற உறுதியான நம்பிக்கையுடன் அவரைக் கண்போல் காத்துப் பராமரிக்கிறார் மகன் பழனி (சமுத்திரக்கனி). ஆனால், அவர் மனைவி (வசுந்தரா), மாமனார், மைத்துனர் ஆகியோர் பழனியின் நம்பிக்கை கண்மூடித்தனமானது என அழுத்தம் கொடுக்கின்றனர். ‘தலைக்கூத்தல்’ முறையில் அவரைக் கருணைக் கொலை செய்ய வற்புறுத்துகிறார்கள். அதற்கு இணங்காத பழனியின் குடும்பச் சூழ்நிலை, கடும் பொருளாதார நெருக்கடியைச் சந்திக்க, அவர் என்ன முடிவு எடுத்தார் என்பது கதை.

‘லென்ஸ்’, ‘தமஸ்கிடோ பிளாசபி’ ஆகிய சுயாதீனப் படங்கள் வழியாக, சமகால வாழ்க்கையில் மலிந்திருக்கும் அழுக்குகளைச் சுவாரஸ்யமாகக் காட்சிப்படுத்தி விழிப்பூட்டியவர் ஜெயப்பிரகாஷ் ராதாகிருஷ்ணன். அவரது மூன்றாவது படமாக வெளிவந்துள்ளது ‘தலைக்கூத்தல்’. இதிலும் முதன்மைக் கதாபாத்திரங்களை உளவியல் ரீதியாக எழுச்சியும் வீழ்ச்சியும் கொண்டவையாக, இருத்தலியல் சிக்கலை மீறி நடைபோட முடியாதவையாகப் படைத்திருக்கிறார்.

‘தலைக்கூத்தல்’ எனும் வழக்கத்தை சமூக இழிவாகச் சாடியும் எள்ளல் செய்தும் இதற்குமுன் 2 படங்கள் (கேடி, பாரம்) வெளிவந்திருக்கின்றன. இந்தப் படமோ, தந்தை - மகனுக்கு இடையிலான பிணைப்பையும் உடல் இயங்காமல் போனாலும் நினைவுகளின் வழியே உயிர் வாழ முடியும் என்கிற மனித மனதின் ஆற்றாமையையும் இணைகோடாகச் சித்தரிக்க, ‘தலைக்கூத்த’லை ஓர் ஓவியக் கித்தான் போல்பயன்படுத்திக் கொண்டிருக்கிறது.

பாதிக்கும் அதிகமான காட்சிகள் ‘உரையாட’லின் பிடிமானத்துடன் அமைக்கப்பட்டிருகின்றன. அதேநேரம், உரையாடல் குறைந்து, உணர்வுகள் மட்டுமே வெளிப்படும் காட்சிகளும் கதாபாத்திரங்களின் வாழ்விடத்துக்கு அழைத்துச் செல்லும் நிலவெளிக் காட்சிகளும் இயக்குநரின் தேர்ச்சிமிக்க ‘காட்சி கற்பனை’யாக உருப்பெற்று, சிறந்த திரை அனுபவத்தை வழங்குகின்றன.

‘மேஜிக்கல் ரியலிசம்’ என்கிற உத்தியை கதாபாத்திர உளவியல் சிக்கலுடன் நுட்பமாகப் பொருத்தி, அதுபற்றி அறிந்திராத பார்வையாளர்களும் ரசிக்கும் வண்ணம் எளிமையான விஷுவல் எஃபெக்ட் மூலம் சித்தரித்திருப்பது, படத்தின் கதை சொல்லலுக்கு ‘சர்ரியலிச’ தன்மையை வழங்கியிருக்கிறது.

படத்தின் ஒலி வடிவமைப்பு, ஒளிப்பதிவு, விஷுவல் எஃபெக்ட்ஸ், இசை ஆகியன கதை சொல்லலில் படைப்புப் பங்களிப்பாக மாறியிருக்கின்றன. பழனியாக வரும் சமுத்திரக்கனி, அவர் மனைவி கலைச்செல்வியாக வரும் வசுந்தரா, பழனியின் இளவயது அப்பா கதிர், வயது முதிர்ந்த அப்பாவாக வரும் கலைச்செல்வன், பேச்சியாக வரும் வங்காள நடிகர் கதா நந்தி, பழனியின் மகள் ராஜியாக வரும் விஸ்ருதா என படத்தில் வரும் அத்தனை பேரும் கதாபாத்திரங்களாகவே வாழ்ந்திருக்கிறார்கள்.

தலைக்கூத்தல் என தலைப்பு வைக்கப்பட்டிருந்தாலும் உயிர் என்பது ரத்தம் சதையால் மட்டும் இயங்குவதல்ல; உணர்வுகளாலும் நினைவுகளாலும் கட்டி எழுப்பப்பட்டிருக்கும் வாழ்க்கையின் ஆதார சக்தி என்பதை, அப்பா - மகன் கதாபாத்திரங்கள் வழியாக உணர்த்திச் செல்கிறார் இயக்குநர். அவசியம் பார்க்க வேண்டிய படைப்பு.

# குடியிருக்கும் இடத்திலேயே வீடுகள் கட்டித் தர மார்க்சிஸ்ட் கட்சி கோரிக்கை - கோரிக்கையை நிறைவேற்றி தருவதாக மேலாண்மை இயக்குனர் உறுதி - சி பி எம் மத்திய சென்னை மாவட்ட செயலாளர் ஜி.செல்வா



சென்னை, பிப்ரவரி 06 2023: சென்னை மாவட்டம் - ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதி - 29, கிரீம்ஸ் சாலையில் அமைந்துள்ள அழகிரி நகர் பகுதியில் குடியிருக்கும் சுமார் 250 குடியிருப்புகளுக்கு அப்பகுதியிலேயே தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் வீடுகளைக் கட்டித் தர வலியுறுத்தி தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குனரை மார்க்சிஸ்ட் கட்சியின் மத்திய சென்னை மாவட்டச் செயலாளர் ஜி. செல்வா இன்று (06.02.2023) நேரில் சந்தித்து மனு அளித்தார். அம்மனுவின் விவரம் வருமாறு:

சென்னை மாவட்டம் - ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதி - 29, கிரீம்ஸ் சாலையில் அமைந்துள்ள அழகிரி நகர் பகுதியில் குடியிருக்கும் சுமார் 250 குடியிருப்புகளுக்கு அப்பகுதியிலேயே தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் வீடுகளைக் கட்டித் தர வலியுறுத்தி மார்க்சிஸ்ட் கட்சியின் மத்திய சென்னை மாவட்டச் செயலாளர் ஜி. செல்வா, சிஐடியு மாவட்டச் செயலாளர் சி. திருவேட்டை, அமைப்புசாரா சங்கத்தின் செயலாளர் வி. செந்தில்குமார், ஆயிரம்விளக்கு கட்சியின் பகுதி செயலாளர் வெ. ரவீந்திரபாரதி ஆகியோர் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குனரை இன்று (06.02.2023) நேரில் சந்தித்து மனு அளித்தார். அம்மனுவின் விவரம் வருமாறு:

“சென்னை மாவட்டம் ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதியில் உள்ள எண்.29, கிரீம்ஸ் சாலையில் 11 3/4 கிரவுண்ட் உள்ள பகுதியில் சுமார் 250 குடியிருப்புகளில் 1500க்கும் மேற்பட்ட மக்கள் கடந்த 69 ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வருகின்றனர். இம்மக்களில் பெரும்பாலானோர் பட்டியலின சமூகத்தைச் சார்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு அரசின் முதல்வராக டாக்டர் கலைஞர் அவர்கள் செயல்பட்ட காலத்தில் 1999ஆம் ஆண்டு தாட்கோ மூலமாக 239 வீடுகளுக்கு கல்நார் ஓடுகள் கட்டித்தரப்பட்டது. இதைத் தொடர்ந்து தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் சார்பில் மேம்பாடு செய்யப்பட்ட மாதிரி குடிசைப் பகுதியின் திறப்பு விழா அன்றைய சென்னை மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர், இன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களால் 2001ஆம் ஆண்டு ஜனவரி மாதம் திறந்து வைக்கப்பட்டது.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அதிமுக ஆட்சி காலத்தில் இவ்விடத்திலிருந்து மூன்று கிரவுண்ட் இடம் அட்சயபாத்திரம் தொண்டு நிறுவனம் செயல்படுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. 8 3/4 கிரவுண்ட் பகுதியில் நெருக்கடி மிகுந்த நிலையில் இம்மக்கள் வசிக்க வேண்டிய சூழ்நிலையில் உள்ளனர். மேலும் இப்பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் வீடுகளை கட்டித்தர வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்து சட்டமன்றத்தில் ஆயிரம்விளக்கு சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் எழிலன் பேசி உள்ளார்.

எனவே அப்பகுதி மக்களின் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் தாங்கள் இப்பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் அடுக்குமாடி குடியிருப்புகளை கட்டித் தருவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். நன்றி! ”

இம்மனுவினை பெற்றுக் கொண்ட மேலாண்மை இயக்குனர் கோரிக்கையை நிறைவேற்றி தருவதாக மார்க்சிஸ்ட் கட்சி தலைவர்களிடம் உறுதி அளித்துள்ளார்.

இச்செய்தியினை தங்கள் பத்திரிகை/ஊடகத்தில் வெளியிடுமாறு கேட்டுக் கொள்கிறோம். நன்றி !